Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1105)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை (06.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 66



கடன் சுமை அதிகரிப்பு

08



கலைமதி சம்பியன்

11



சட்ட திட்டம் பின்பற்ற வேண்டும்

04




படை வாபஸ்

13

# போருக்குப் பின்னரான நிலைமைகளில் முன்னேற்றம்

## — ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு —



(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை போருக்குப் பின்னரான நிலைமைகளில் முன்னேற்ற மடைந்து வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐ.நா. சபையின் தன்னார்வ தொண்டர் சேவை தொடர்பான அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஐ.நா.வின் அபிவிருத்தி நிகழ்ச் சித் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் டக்ளஸ் கே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது, இலங்கையானது போருக் குப் பின்னரான (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்பு மீண்டும் இன்று பேச்சு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சு மீண்டும் இன்றைய தினம் இடம்பெற வுள்ளது. இன்றைய தினம் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு அரசாங்கத் தரப்பு தமக்கு அழைப்பு விடுத்துள்ள தாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தத் தகவலை நேற்று மாலை வெளியிட் டுள்ளார்.

இதன்போது இனப்பிரச்சினைத் தீர் வுக்கான வரைபுகள் குறித்து தமது தர ப்பு அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கத் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கேரதீவு கோவிலாக்கண்டி வீதியில் அடர்ந்த பனம் வடலிகள் செறிந்த இடமொன்றில் பூவரசம் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரது சடலம் சாவகச்சேரி பொலிஸாரி னால் மீட்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாகா பொறியியல் நிறுவனத்திற்கு பொருட்களை ஏற்றியிறக்கும் தனியார் கன்ரர் வாகனம் ஒன்றில் கிளீனராக பணிபுரிந்த மதுசல் (வயது - 26) என்ற தென்பகுதியைச் சேர்ந்த இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளவராவார். தொலைபேசி வயர் ஒன்றினால் சுருக்கிட்டு தொங்கிய நிலையிலேயே இச்சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருவதுடன் சடலம் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கென யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

## புலி ஆதரவாளர்களுடன் இணைந்து நாட்டைக் காட்டிக்கொடுக்க முயற்சி

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்களுடன் இணைந்து நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு சிலர் முயற்சிக் கின்றார்கள். இவ்விடயத்தில் மக்கள் கவனம் செலுத்தியுள் ளார்கள். நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களை எந்த வகை யிலும் மன்னிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடை, பட்ட பொல சிறி சுபத்ராராம விகாரை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட் டுள்ள அனுமதஸ்ஸி தேரர் நினைவான இருமாடி கட்டடத் தைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மகி ந்த (15 ஆம் பக்கம் பார்க்க)



## 25 ஆயிரத்து 27 பேர் வாக்காளராக பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் மீள் பதிவின்போது 25 ஆயிரத்து 27 பேர் புதிதாக தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இதன்படி யாழ். மாவட்டத்தில் 11 தேர் தல் தொகுதி ரீதியாக பதிவுசெய்த வாக் காளர்களின் விபரம் வருமாறு -

ஊர்காவற்துறையில் 1119 வாக்கா ளரும், வட்டுக்கோட்டையில் 1159 வாக்கா ளர்களும், காங்கேசன்துறையில் 496 வாக்காளரும், (15 ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் வள ஆய்வில் சீனா அதிருப்தியடைகிறது இந்தியா

(கொழும்பு)

இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பரப் பில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியை மேற்கொள்ள சீன நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கும் யோசனை தொடர் பில், இந்தியா உத்தியோபூர்வமாக தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக இராஜ தந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

சீனா, இலங்கை கடற்பரப்பில் மேற் கொள்ளும், இந்த ஆய்வு பணிகள் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்த லாக இருக்கும் என்பதால், அந்த நாடு இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பை மூன்றாக பிரித்து, எண்ணெய் வள ஆய்வு பணி கள் மேற்கொள்ளப்படுவதுடன், இதில் மன்னார் கடல் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ளும் பணிகள் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(15 ஆம் பக்கம் பார்க்க)


## கண்ணிவெடி அகற்ற 133 சதுர கிலோமீற்றரே!

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றுவதற்கு இன்னும் 133 சதுர கிலோமீற்றர் பரப்பளவு மாத்திரமே எஞ்சியிருப்பதாக மனிதாபிமான தேசிய நிலக்கண்ணி வெடி அகற்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் இதுவரையிலும் ஆயிரத்து 912 சதுர கிலோமீற்றர் பரப் பளவான பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவது தொடரும்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் தொடர்ச்சியாக அரசாங்கத்துடன் இணைந்த வண்ணமேயுள்ளனர். இந்த நிலைமையானது இன்னும் தொடருமென ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச் சருமான தினேஷ் குனவர்தன தெரிவித்தார்.

வரவு - செலவு திட்டத்தில் அவரது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் முன்னெடுக்கப்பட உள்ள அமைச்சின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் விளக்கம ளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றைய தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டில் நியாயம் இன்றேல் சர்வதேசத்தில் முறையிடுவேன்

### பொன்சேகா சூளுரை

(கொழும்பு)

உள்நாட்டில் தனக்கு நியாயம் கிடைக்கா விட்டால் சர்வதேசத்திடம் செல்வதற்கும் தயங் கப் போவதில்லையென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக நேற்றைய தினம் கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலையொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளை அங்கு (15 ஆம் பக்கம் பார்க்க)



மெய்ப்பொருள் - சமத்துவம் - சகோதரத்துவம்

# நாடுதழுவிய வாழ்வெழுச்சித் திட்டம்; மேலதிக நிதி ஒதுக்கீட்டுடன் தொடரும்

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்



நாடளாவிய ரீதியிலான வாழ்வெழுச்சித் திட்டத்தில் தற்போதைய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ள அதேவேளை 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்திலும் மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள மத்திய வங்கியின் தலைமையகத்தின் ஜோன் எக்ஸ்ரர் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்வெழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய வங்கிகளூடாக கடன் திட்டத்தை வழங்கி குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சிக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2011 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் ஒரு மில்லியன் மனைப் பொருளாதார அலகுகளுக்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 1.5 மில்லியனாக அதிகரித்து 2.5 மில்லியன் மனைப் பொருளாதாரமாக மேலும் விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் உலக உணவுப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் வாழ்வெழுச்சித் திட்டம் முக்கியமானது என்றும் வீட்டுத் தோட்டத்தை மட்டுமல்லாது, கால்நடை வளர்ப்பு, கடற்றொழில், குடிசைக் கைத்தொழில் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சர் எ.எச்.எம் பௌசி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வாழ்வெழுச்சி தொடர்பான விளக்கவுரையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவ ஞானசோதி வழங்கியதைத் தொடர்ந்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் உரையாற்றினர்.


பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் வாணிப அமைச்சு, ஆராய்ச்சி தொழில்நுட்ப அமைச்சு, இளைஞர் திறன் அபிவிருத்தி அமைச்சு அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகிய ஐந்து அமைச்சுக்களின் 16 அரச நிறுவனங்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இவ்வாண்டு கொழும்பு அநுராதபுரம் யாழ்ப்பாணம், கேகாலை கம்பகா மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே கண்காட்சிகளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இவற்றினூடாக பயனாளிகள் பெற்ற பயனாளிகளுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் ஏனைய நான்கு அமைச்சுக்களும் சேர்ந்து மத்திய வங்கியுடன் இணைந்து குடிசைக் கைத்தொழில் நடவடிக்கைகளை கடன்வழங்கும் திட்டத்தினூடாக முன்னெடுக்கவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பணிக்கொடை பதிவு கால எல்லை நீடிப்பு

லங்கா உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த பணியாளர்கள் தமது பணிக்கொடையினைப பெறுவதற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பதாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் நிலோஜினி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும், மேற்படி பணிக்கொடையினைப் பெறும் தகுதியுடைய பணியாளர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டவர்கள் எவராவது இறந்திருப்பின் அவரின் பின் உரித்தானவர்கள் இறந்தவரின் மரணச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடனும் ஏனைய ஆவணங்களுடனும யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் பணிக்கொடை பெறுவதற்கான பதிவுகளையும் மேற்கொள்ளலாம் என அறிவிக்கபட்டிருக்கிறது. (எஸ்)



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேசத்தில் ஆழமாக்கப்பட்ட மூன்று குளங்களுக்குமான பெயர்ப் பலகைகள் நேற்று அப்பகுதிகளில் வைபவ ரீதியாக நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர், வேலணைப் பகுதி வாழ் மக்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (85)

# இளைஞர் காயம்

கட்டடவேலை செய்யும்போது கல் தலையில் விழுந்து இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 2 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த றொனால்ட் றீகன் (வயது - 22) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# குடத்தனையில் ஒளிவிழா

யாழ். குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஒளிவிழா நாளை முற்பகல் 9.00 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் மணற்காடு புனித அந்தோனியார் தேவாலய அருட்தந்தை லெஸ்லி அன்ரனி பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்ககட்சி தலைவரும், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளருமான ஐ.ரங்கேஸ்வரன், கிறிஸ்து நந்துாதுப் பணியக போதகர் ஜோன் புவியரசன், பருத்தித்துறை கத்தோலிக்க திருமறை ஆசிரிய ஆலோசகர் திருமதி டொ.மண்மதராஜா ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (116)

# பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள்

(பருத்தித்துறை)

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை திணைக்களத்தினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகளில் தொகுதி பாடங்கள் தொடர்பாக பாட மாற்றம் ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் குறிப்பாக பிழையாகக் குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பரீட்சார்த்தி தனது அனுமதி அட்டை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தையும் அவ்வவ் வலய கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபரூடாக எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# ஹெரோயின் விற்பனை இருவருக்கு விளக்கமறியல்

கடந்த சனிக்கிழமை அன்று யாழ். நகரில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரையும் யாழ். நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டது. யாழ். ஐந்து சந்தி மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த குறித்த இவ்விரு இளைஞர்களும் யாழ். பொலிஸாரால் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இவர்கள் மீதான வழககினை விசாரணை செய்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள இருவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாரைப் பணித்தார். (பா)

# மக்கள் வங்கியின் சேவை நிலையம் அளவெட்டியில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி வாடிக்கையாளர்களின் நலன் கருதி அளவெட்டியில் சேவை நிலையம் ஒன்றினை நாளை திறந்துவைக்க உள்ளது.

இச்சேவை நிலையத்தினைக் காலை 9.00 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைக்க உள்ளார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைசசின் செயலாளரும் ஆளுநரின் செயலாளருமான இ.இளங்கோவன், வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிலையம் யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படும் பதினானகாவது சேவை நிலையமாகவும் 27 ஆவது கொடுக்கல் வாங்கல் செய்யும் பகுதியாகவும் உள்ளது.

இச்சேவை நிலையம் சுன்னாகம் மக்கள் வங்கி கிளையுடன் இணைந்து செயற்படும் இங்கு விவசாயக்கடன், சுயதொழில் முயற்சிக் கடன், வீடமைப்பு கடன போன்ற கடன் வசதிகளையும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். (54)

# பிரதம செயலாளராக விஜயலட்சுமி நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பிரதம செயலாளராக திருமதி விஜயலட்சுமி ரமேஷ் நியமனம் பெற்றுள்ளார்.

பிரதம செயலாளராக கடமையாற்றிய ஆர்.சிவசுவாமி ஓய்வு பெற்றதை அடுத்தே இருவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திருமதி விஜயலட்சுமி ரமேஷ் வடமகாண உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தராசுகளுக்கு முத்திரையிடல்

யாழ். மாவட்ட நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினால வடமராட்சி - பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் தராசு .(கணினி தராசு) களுக்கு முத்திரை இடும் பணி இன்று பருத்தித்துறை பிரதேச சபை கட்டடத்தில் இடம்பெறுமென சபைத் தவிசாரளர் பூ.சஞ்சீவன் அறிவித்துள்ளார். (116)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

இறைவனை வணங்குகிறேன். அதனால் என் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்கிறேன். பகுத்தறிவின் மூலம் உண்மையைக் கண்டுபிடிக்கவும் இறைவனே என்னைத் தூண்டுகிறான் என்னுள் இருக்கும் தீயவற்றை அழித்து அன்பு பூண்ட மனிதனாக மாற்றிக் கொள்ள முயலுகிறேன். இறைவனே என்னை வலிமையுள்ளவனாக மாற்றுகிறான் அந்த வலிமையை எனது செயலில் காட்டுகிறேன்.

- கவிஞர் தாகூர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கிருமிநீக்கம் செய்யப்படாத பழைய ஊசி!

“அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா போன்ற நாடுகள் இலங்கை அரசு மீதான தமது அழுத்தத்தை கைவிடப்போவதில்லை. ஆனால் இந்தியாவானது இலங்கையுடன் இது தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. அனைத்துலக அரங்கில் இலங்கையை ஆதரித்தே இந்தியா செயற்பட்டுவருகின்றது.

வரும் மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இலங்கை அரசு எந்தவொரு பொருத்தமான தீர்வையும் முன்வைக்காவிட்டால், அனைத்துலக அரங்கில் பல புதிய சவால்களுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டியேற்படும். இவ்விடயத்தில் மேலும் இந்தியா உதவி புரிய முடியாத நிலை தோன்றும்.”

இவ்வாறு சென்னையிலிருந்து வெளியாகும் ‘புரொன்ட் லைன்’ சஞ்சிகை எழுதியுள்ளது. தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டிருக்கும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு இலங்கை அரசாங்கம் செயற்படவேண்டியுள்ளது. அத்துடன் அனைத்துலக சமூகத்திற்கு தான் எதையும் மறைக்கவில்லை என்பதையும் காண்பிக்க வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு என அந்தக் கட்டுரை குறிப்பிடுகிறது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவருவதற்கான புற அழுத்தங்களை அனைத்து வெளித்தரப்புகளும் முயன்று செய்துவருகிறார்கள் என்பது தூலமாய்த் தெரிகிறது. இலங்கை அரசதரப்பின் குற்றவுணர்வைத் தூண்டி வலுப்படுத்தி விடுவதன் மூலம், தென்னிலங்கை இனவாத சக்திகளைப் புறமொதுக்கிவிட்டுத் தீர்வொன்றைச் சாத்தியப்படுத்தக் கூடிய சூழலைக் கனியச் செய்யும் முயற்சிகளாக அவை தென்படுகின்றன.

ஆனால் ஏகப்பிரதிநிதித்துவம் வேண்டி உலகவலம் வரும் தமிழ்த் தரப்பு என்ன செய்கிறது? இந்த சூழலையும் குழப்பியடித்துவிடப் பேச்சை முறித்துவிட்டு வருகிறது. அதை பெரும்பான்மைத் தமிழ் ஊடகங்களும் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாக வரவேற்கின்றன.

தமிழ் வீரம் ரோசம் ஆகியவற்றைக் காப்பாற்றும் நோக்கில் பேச்சை முறித்துவிட்டு வந்த வெற்றிவீரர்களாக கூட்டமைப்பினரைப் பாராட்டிக் கொள்ளும் பாமரத்தன அரசியலே இன்னும் நம் மத்தியில் கோலோச்சுவதற்கு எங்குபோய் முட்டுவது? இந்தக் ‘காலத்தைப்’ பயன்படுத்திக் கொள்ள முயலாமல் மக்களை மேலும் பாழ்ங் கிணற்றிலேயே அமிழ்த்தி சுயலாப அரசியல் செய்பவர்களை நம்பி தமிழ் மக்கள் வாழ்வு மீளமுடியுமா?

பேச்சைக் குழப்புவதும் அதை ஊடகங்களெல்லாம் பாராட்டித் திளைப்பதுமான இந்த முட்டாள்த்தனக் கும்பல்மனோநிலையின் பின்னாலுள்ள நம்பிக்கை என்னவாக இருக்கும்? கூட்டமைப்பினர், மக்களுக்கு ஏத்தும் அதே பழைய ஊசிதான்! அது இன்னும் கிருமிநீக்கம் செய்யப்படாமலே உள்ளது. “பேச்சைக் குழப்புவதன் மூலம் இலங்கையரசை அம்பலப்படுத்துகிறோம். இதைப் பார்த்து இந்தியாவோ அமெரிக்காவோ சர்வதேசமோ வந்து நமக்குத் தீர்வை எடுத்துத் தந்துவிட்டுப் போகும்” என்ற அதே பழைய ‘அழுகிவிழ ஏந்தும்’ கதைதான்!

அதைத்தான் ஒரு மாய நம்பிக்கையாகப் பின்னணியில் ஓடவிட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு, தீர்வை இழுத்தடித்து வருகிறார்கள். மிகத் தூய்மையான எல்லாம் நிறைந்த ஒரு தீர்வுக்காக கடைசி உயிர்வரை ‘அழுந்த விடும்’ திட்டத்தில் இவர்கள் இன்னும் விடாப்பிடியாக உள்ளார்கள் என்றறிய நடுக்கமே உண்டாகிறது.

“வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வையே நாம் கேட்கிறோம். அதை அவர்கள் தரப்போவதில்லை. அதை அம்பலப்படுத்தவே பேச்சுவார்த்தைக்குப் போகிறோம், வருகிறோம். இதைப் பார்த்து சர்வதேசம் சும்மா இருக்காது” என்பதையே இப்போதும் மக்களுக்கு நம்பவைத்தபடி இருக்கிறார்கள்.

எதையும் கேட்காமல் பேச்சைக் குழப்பிவிட்டு வருவது; அதன் மூலம் எதிர்ப்புணர்ச்சியைப் பெருக்குவது; முறுகல் நிலைமை தணியவிடாமல் பார்த்துக் கொள்வது; கொள்கை – இலட்சியம் – இனக்குழுப்பெருமை – தனித்துவத்திற்காக எதையும் இழக்கலாம் என்ற உணர்ச்சிகரத்தில் கொந்தளிக்கும் திரளாக மக்களை வைத்திருப்பது; எதிர்ப்பு வீரவசனங்களால் தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளை வேட்டையாடிக் கொள்வது...

யுத்தம் முடிந்து இரண்டரை வருசமான பிறகும் இந்த நாடகத்தையே இவர்கள் வெற்றிகரமாகத் தொடர்வதற்கு இயலுகின்ற நம் அறிவுச்(!)சமூக நிலையை என்ன சொல்ல?

- ஆசிரியர்

# மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய அரச ஊழியர்கள் முன்னிற்க வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர்

(கரவெட்டி)

மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்க ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கரவெட்டி பிரதேச செயலகத்தைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச செயலர், பணியாளர்கள் இணைந்து கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு இவ் வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளனர். பிரதேச செயலரின் சேவைகள் பாராட்டக்கூடியவை. எனவே அரச ஊழியர்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னிற்க வேண்டும்.

மக்கள் தமது பிரச்சினைகளைக் கூறும்போது அதை அவதானத்துடன் கேட்டுத் தீர்வுகாண வேண்டும் இவ்வாறு செயற்படுவது தான் அரசாங்க அலுவலர்களுக்கு இதுபோன்று சிறப்பாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண சபையின் செயலாளர் ஆ.சிவசுவாமி, யாழ் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், 521 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி லெப்ரினன்ட் கேணல் திஸநாயக்கா, யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை, கலாநிதி கலாமணி, தமிழ்த்துறை விரிவுரையாளர் எஸ்.சிவலிங்கராசா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மற்றும் பல பிரதேச செயலர்களும் கலந்து கொண்டனர்.

## - வடக்கு கிழக்கில் -

# புதிய திரையரங்குகளை நிர்மாணிக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசியத்திரைப்படக் கூட்டுத்தாபனம், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள திரையரங்குகளைப் புதுப்பிக்கவும், புதிய திரையரங்குகளை நிர்மாணிக்கவும் தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கூட்டுத்தாபன பிரசாரப்பிரிவு தலைமை அதிகாரி என். விதானகே அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இப்பணித்திட்டத்தில் இணைந்து கொண்டு செயற்படவிருப்பமுள்ளவர்கள் தமது எழுத்து மூலமான விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இல 303 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தேசியத்திரைப்படக் கூட்டுத்தாபன வெளியீட்டு முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும், மேலதிக விபரங்களை 0112593431 இலக்க தொலைபேசி மூலம் அறிந்து கொள்ளலாம். என்றும் அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோப் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும்

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு பொது முயற்சியான்மை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு (கோப்) நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். ஊழல் மோசடிகள், வீண் விரயம் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் கோப் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மோசடிகளில் ஈடுபட்டவர்களை அடையாளப்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுவாக அமைச்சின் செயலாளர்கள் வினைத்திறனாக செயற்படவில்லை என குற்றம் சுமத்துவதில் பயனில்லை. முறைகேடான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொது முயற்சியாண்மை தெரிவுக்குழுவின் அறிக்கை மேலும் ஒரு அறிக்கையாக மாத்திரம் மாறக் கூடாது, அதில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டியது அவசியம் என கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் நாடாளுமன்றத்திற்கு விசேட பொறுப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய பரீட்சை முறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை

புதிய பரீட்சை முறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்களுக்கான நிதி ஒதிக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தற்போதைய கல்வி முறைமையை விமர்சிக்கும் வகையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டனர். அதற்குப் பதிலளித்து உரையாற்றியபோதே பிரதி அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

மனனம் செய்து பரீட்சையில் சித்தியடையும் முறைமைக்கு பதிலாக திறமைசாலிகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் பிரதி அமைச்சர் கூறியுள்ளார். மேலும் ஆசிய பசுபிக் பிராந்திய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை இலங்கையில் ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒப்படைகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நடவடிக்கையால் அதிருப்தி

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்பில் கிறிஸ்தவ அமைச்சு அதிருப்தி வெளியிட்டுள்ளது. குறிப்பாக மொரட்டுவ பிரேம நிவாச எனும் சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளராக செயற்பட்ட அருட் சகோதரி கைது செய்யப்பட்டமைக்கு, கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கத்தோலிக்க தேவாலயங்களின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை செயற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்ய உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சிறுவர் இல்லம் பல ஆண்டுகளாக சேவை வழங்கி வருவதாகவும், சிறுவர்கள் விற்பனை செய்யப்பட்டதாக இதற்கு முன்னர் முறைப்பாடு செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு சில தினங்களில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சில அதிகாரிகள் இடமாற்றத்திற்கு உட்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் விரைவில் இந்துக் கல்லூரியாக மாற்றப்படும்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்



(யாழ். நிருபர்)

பௌதிக வளங்களை வைத்துக் கொண்டு பாடசாலைகளின் வளர்ச்சியை மதிப்பிட முடியாது. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி சிறந்த பெறுபேறுகளைப பெறுவதன் மூலமே ஒரு பாடசாலையின் வளர்ச்சி யைக் கணிப்பிட முடியும். மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு அதிபர், ஆசிரியர்களோடு பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வடமாகாண ஆளுநரின் செயலாளரும், வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான இ. இளங்கோவன் குறிப்பிட்டார்.

வித்தியாலய முதல்வர் சு. சண்முககுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

அரசாங்கம் பாடசாலைகளுக்குப் பெருமளவில் கணினி மற்றும் நவீன தொழில்நுட்ப சாதனங்களை வழங்கி வருகின்றது. ஆனால், அவற்றின் பயன்பாடு குறைவாகவே உள்ளது.

நகர்ப்புறப் பாடசாலைகளில் பொதுத் தேர்வுகளை மட்டுமே இலக்காகக் கொண்டு இயந்திரமயமாக மாணவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிராமப்புறப் பாடசாலைகள் மாணவர்களை சமூக மயப்படுத்தும் பணிகளில் ஈடுபடுவதைக் காண முடிகிறது.

தேங்காய் முடியோடும், அரிசிப்பிடியோடும் ஆரம்பிக்கப்பட்ட பல பாடசாலைகள் இன்று பல்வேறு வளங்களையும் பெற்று அபிவிருத்தியடைந்துள்ளன. உங்கள் கோரிக்கைக்கிணங்க எல்லா வளங்களையும் கொண்டுள்ள இப்பாடசாலை விரைவில் கோண்டாவில் இந்துக் கல்லூரியாக மாற்றப்படும்.


மகிந்த சிந்தனையில் ஆயிரம் பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட உங்கள் பாடசாலை அடுத்த ஆண்டு முதல் இன்னும் பல வளங்களைப் பெற்று அபிவிருத்தியடையவுள்ளது.

உங்கள் பாடசாலையின் மைதானப் பிரச்சினை மனிதாபிமான முறையில் அணுகி வெகுவிரைவில் தீர்வு காணப்படும். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் கோண்டாவில் சமூகம் அக்கறை கொண்டிருப்பது மகிழ்ச்சியான விடயமாகும். பெற்றோர், பழைய மாணவர்களின் உதவியால் பௌதீக வளங்கள் கிடைத்துள்ளன. அவை சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியது எனவும் குறிப்பிட்டார்.

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா சிறப்புரை வழங்கினார். மூத்த ஊடகவியலாளர் செல்லப்பா நடராசா வாழ்த்துரை வழங்கினார்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கிருபாகரி இளங்கோவன் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். உப அதிபர் இ. அருணகிரிவாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். (10)





யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை நிலையச் செயற்றிறன் இயக்கத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய நாட்டார் கலை ஆற்றுகை நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றபோது, தென்னிந்திய ஆடலரசன் வேனு கோபாலை பேராசிரியர் சண்முகதாஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம் : சுமித்தி)


## கற்பக விநாயகர் ஆலய இலச்சார்ச்சனைப் பெருவிழா

(கோப்பாய்)

கோப்பாய் அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான விநாயகர் விரத இலச்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முதல் மாலை 3.30 மணிக்கு அபிஷேகமும் 4 மணிக்கு மூலஸ்தான பூசை, 4.15 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இலச்சார்ச்சனையும் பிள்ளையார் கதைப்படிப்பும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 5 மணிக்கு சங்கடகர சதுர்த்தியும், 28ஆம் திகதி மாலை 5 மணிக்கு சதுர்த்தி உற்சவமும் இடம்பெறுவதுடன் 29ஆம் திகதி மாலை 5 மணிக்கு கஜமுக சங்காரமும் நடைபெற்று 30ஆம் திகதி விநாயக சஷ்டியும் இலச்சார்ச்சனையும் நிறைவடையவுள்ளது. தொடர்ந்து அன்றைய தினம் அதிகாலை 5.30 மணிக்கு திருவெம்பாவை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (135)

## தற்காலிகக் கொட்டகைகளும் சேதம் மாணவர்களின் கல்வி பாதிப்பு



(முழங்காவில்)

பூநகரி மகாவித்தியாலயக் கட்டடங்கள் இதுவரை திருத்தப்படாமையால் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இங்குள்ள மாணவர்கள் இப்பாடசாலையிலேயே கல்வி கற்று வருகின்றனர்.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த இப்பாடசாலைக் கட்டடங்கள் இதுவரை மீள்புனரமைப்புச் செய்யப்படாது காணப்படுவதுடன் இக்கட்டடங்களிலே மாணவர்கள், ஆசிரியர்கள் சிரமத்தின் மத்தியில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகமாக ஓலையால் வேயப்பட்ட கொட்டகைகளும் மழையினால் சேதமடைந்த நிலையில் மழை வெள்ளம் வகுப்பறைகளில் தேங்கி நிற்பதால் மாணவர்கள் பாடங்களைக் கற்க முடியாது திரும்பிச் செல்லும் அவல நிலையும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அடுத்த வருடத்தில் மாணவர்கள் சிரமமின்றி கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என மாணவர்கள் மற்றும் பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (112)

## நாவாந்துறைப் பகுதியில் நவீன கள் விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நவீன கள் கிளை விற்பனை நிலையம் ஒன்றை நாவாந்துறைப் பகுதியில் திறந்து வைத்துள்ளது.

சங்கத் தலைவர் கெ. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த. சிவலிங்கம், சமாசப் பதில் பொதுமுகாமையாளர் வ. சிவகுமார், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் இ. பாலச்சந்திரன், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் இ. விஜயமோகனராசா, சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், நுகர்வோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நவீன கள் விற்பனை நிலையம். சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்தில் எதிர்வரும் 9,10, 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சிறுவர் ஒன்றுகூடல் நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் கிராமிய பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் பங்குபற்றவுள்ளனர். இவ் ஒன்றுகூடலில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவர்களே பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வூதியம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் தனது 30 உறுப்பினர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கி வருகிறது. 2010 ஆம் ஆண்டு முதல் அங்கத்தவர்களின் பங்களிப்புக்கேற்ப 5 வீதத்தால் வழங்கப்பட்ட ஓய்வூதியம் தற்பொழுது 7 வீதமாக வழங்குவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# உத்தரவுப் பத்திரம் பெற்ற மதுவரி நிலையங்கள் சட்டதிட்டங்களைக் கட்டாயம் பின்பற்றவேண்டும்!

## வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் வி. கிறிஸ்ரியோசப்

(யாழ்ப்பாணம்)

மதுபான விற்பனையில் இளையோரைக் கவரக்கூடிய கவர்ச்சியான விளம்பரங்கள் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் வி. கிறிஸ்ரியோசப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மதுவரித் திணைக்களத்தில் நடைபெற்ற வட பிராந்தியத்தில் உள்ள உத்தரவுப் பத்திரம் பெற்ற மதுபான விற்பனையாளர்களுடனான கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உத்தரவுப் பத்திரத்தைப் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மதுவரிச் சட்டத்தை மீறிச் செயற்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மதுவரித் திணைக்களத்தில் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட மதுவரி நிலையங்களை மதுவரித் திணைக்களம் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றது.

மதுவரித் திணைக்களத்தினால் மதுபான விற்பனை நிலையங்களுக்குப் பொருத்தப்படும் பெயர்ப் பலகையானது மதுவரிச சட்டதிட்டங்களிற்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

மதுபான விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்ற மதுபானங்களின் விலைகள், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நுகர்வோருக்குத் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

பெயர்ப் பலகையிலோ, விளம்பரப் பலகையிலோ இளையோரைக் கவரும் வண்ணம் கவர்ச்சிகரமான சொற்களைப் பயன்படுத்தக்கூடாது. 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்வது அவர்களை மதுபானச் சாலைகளில் வேலைகளுக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மதுபான நுகர்விற்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தைத் தவிர ஏனைய விற்பனை நிலையங்களில் மதுபான நுகர்விற்கு அனுமதி அளிக்கக்கூடாது. மதுபானக் கொள்வனவு சரியான முறையில் பதியப்படவேண்டும். மதுபான விற்பனை நிலையத்தை நுகர்வோருக்கு ஏற்ற வகையில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். போன்ற இவ்வாறான சட்டதிட்டங்களை உத்தரவுப் பத்திரம் பெற்ற விற்பனையாளர்கள் கட்டாயம் பிற்பற்ற வேண்டும்.

இவ்வாறான விதிகள் பின்பற்றப்படாவிட்டால் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் வி. கிறிஸ்ரியோசப் மேலும் தெரிவித்துள்ளார்.

# சங்கீத இசையும் சமயமும் அழிவடைந்து செல்கின்றது

## ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு

(யாழ்ப்பாணம்)

சங்கீத் இசையும் சமயமும் அழிவடைந்து செல்வதாக ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தமிழோடு இசை பாடல் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை ஆற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று இளைஞர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் பொப் இசைப் பாடல்களிலே மெல்ல மெல்ல அழிவடைந்து போவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதனால் இன்று இவ்வாறான ஒரு விழா நடைபெறுவதையும் விழாவிற்கு வருகை தந்திருப்பவர்களையும் பார்க்கும்போது மனம் பூரிப்படைகின்றது.

இவ்வாறான விழாக்கள் ஒவவொரு இடங்களிலும் நடைபெறுமானால், நிச்சயமாக சங்கீத இசையினை அழியவிடாது பாதுகாத்துக் கொள்ளலாம். இசைக்கு மொழி, இனம், சமயம் ஏதுமில்லை. பாரபட்சமின்றி அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டியதாகவே இசை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.


மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் என் வேதாசினி, ரொபேர்ட் தவநாதன் ஆகியோரின் இசைக் கச்சேரிகளும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் நூலின் முதற் பிரதியினை வெளியிட்டு வைக்க சங்கீத வித்துவான் உ.சிவஞானராசா பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி க.குணராஜா, சங்கீத வித்துவான் கே.கருணாகரன், சங்கானைப் பிரதேச செயலாளர் எஸ்.புத்திரசிகாமணி, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகதாஸ் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



லயன் திலகநாயகம் போலின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பக்கவாத்திய இசை சகிதம் வேதாசினி நந்தகுமாரின் இசையாராதனை இடம்பெறுவதைக் காணலாம்.



எயிட்ஸ் வாரத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலைக் கைதிகளுக்கு இடையில் கவிதைப் போட்டி நடாத்தப்பட்டது. இப்போட்டியில் முதல் இடம்பெற்ற கைதி சுகுணனுக்கு பரிசிலை பால்நிலை தொற்றுநோய் வைத்திய நிபுணர் சி.கணேசலிங்கம் வழங்குவதைக் காணலாம்.

# வீதிகளைப் புனரமைத்து தருமாறு எதிர்க்கட்சி தலைவரிடம் கோரிக்கை

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கோண்டாவில் சைவப பாடசாலையினதும், வீதியினரும் முத்தட்டுமட வீதியினதும் அமெரிக்க மிஷன் வீதி அரசினர் வைத்தியசாலை வீதியினதும் சீர்கேடுகளைப் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீவந்திரதாசன் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

பெரும் மழைப்பொழிவு காலங்களில் இவ்வீதிகளை மேவி வெள்ளம் ஓடுவதால், மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதை அடுத்து, அவ்வீதிகள் வெள்ள நீர் வடிந்து ஓடக்கூடிய வகையில் வாய்க்கால்களைச் சீர்செய்து தருமாறும், குண்டும், குழியுமாகக் காணப்படும் அவ் வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவர் மேற்படி பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட இலவச பாடநூல் விநியோக நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி இந்துக். கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களும், மாணவர்களுக்கான இலவச பாடநூலை வழங்குமாறும், ஒவவொரு தரத்திலும் புத்தகங்களை சீராகப் பயன்படுத்திய 3 மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## பொதுக்கூட்டம்

நீர்வேலி திருமுருகன் அறநெறிப் பாடசாலையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அறநெறிப் பாடசாலையின் அவசியம் பற்றிய கருத்துரைகள் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவுகள் என்பன இடம்பெறவுள்ளதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

06.12.2011 – செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 20 ஆம் நாள்.
இராகுகாலம் 3.17–4.47, சுபநேரம் 10.47 –12.17 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.ப 10.15 வரை
திதி: ஏகாதசி பி.ப 1.26 வரை.
ஏகாதசி விரத நாள்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், ஒருவரைத் தேடிப்போதல், சபல புத்தி, மாமனார் விரோதம், தேகம் சுகம்.

ரிஷபம:– எதிரியை வெல்லுதல், காசுக்கஷ்டம், உறவினர் வருகை, கடன் பெறுதல், உடல் உபாதை.

மிதுனம் :– பணம் வரும், அதிகாரப் போட்டி, அற்பர் நேசம், பிணக்குத் தீரும், தேகம் சுகம்.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், சகோதர வெறுப்பு, வீண் கோபம், உடல் சுகவீனம்.

சிம்மம்:– பணம் வரும், பிரதான தீர்மானம், தொழிலில் ஆதாயம், விருந்துபசாரம், தேகம் சுகம்.

கன்னி :– சகோதர உதவி, காசுக்கஷ்டம், தொழில் முடக்கம், உறவினர் உதவி, தேகம் பலவீனம்.

துலாம் :– பணம் வரும், பெரியோர் பாராட்டு, மேலதிகாரிகள் குறைகூறல், எதிரியை வெல்லல், தேகம் சுகம்.

விருச்சிகம்:– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், மனக் குறை, நினைத்ததைச் சாதித்தல், தேகம் சுகம்.

தனுசு:– பணம் வரும், அதிகாரப் போட்டி, மனக்கவலை, வீண் அலைச்சல், உடல் உபாதை.

மகரம:– நினைத்ததைச் சாதித்தல், காசுக்கஷ்டம், தானதர்ம சிந்தனை, தேகம் பலவீனம், விபத்து வரலாம்.

கும்பம் :– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, சுற்றத்தார் ஆதரவு, தேகம் நற்சுகம்.

மீனம் :– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், வசதிக்குறைவு, வீண் வதந்தி, தேகம் சுகம்.

# உணவுப் பொதிகள் அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

கோண்டாவில் பிரதேச வைத்திய சாலையில் தற்காலிகமாக இயங்கி வரும் அரசு பொறுப்பேற்கும் இல்லமான கைதடி சிறுவர் இல்லத்துக்கு பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் உணவுப் பொதிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வில் பதினையாயிரம் ரூபா பெறுமதியான முதலுதவிப் பெட்டிகள் மற்றும் பால்மா, அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் என்பன நிலையப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இச்சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு மேலும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

## பனை அபிவிருத்தி சபை

# பனந்தொழில் வல்லுநர்களுக்கு உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு பனை அபிவிருத்திச் சபை தொழில் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பனை அபிவிருத்தித் தலைவர் ப.சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த உபகரணங்கள் பதநீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இடம்பெயர்ந்த பனந்தொழில் வல்லுநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

யாழ். மா.வட்டத்தில் உள்ள 19 பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களில் இருந்து தலா 10 அங்கத்தவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்ட 190 அங்கத்தவர்களுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

சங்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் பட்டியலை சங்கங்களிடமிருந்து சமாசம் பெற்று, பனை அபிவிருத்திச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளது. இதனை அடுதே பனை அபிவிருத்திச் சபை இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

# சமூக அபிவிருத்தி நிறுவனம் விண்ணப்பம் கோரியுள்ளது

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் 7 பதவிகளுக்கு விண்ணப்பங் கோரப்பட்டுள்ளது.

இதன்படி விரிவுரையாளர் தரம் II, பயிற்சி உத்தியோகத்தர் தரம் II, ஆய்வு உத்தியோகத்தர், தரம் II, மொழிபெயர்ப்பாளர், தரம் III (சிங்கம், தமிழ்) ஆய்வு உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங் கோரப்பட்டுள்ளது.

இப்பதவி வெற்றிடங்கள் நாவலை ராஜகிரியவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் காணப்படுவதுடன் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தலைமை அலுவலகத்தில் பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி முழுமையான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் 488 A நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடவேண்டும். முழுமையற்ற தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கத்துறையில் பணியாற்றும் உத்தியோகத் தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள, நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்கபடவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தகைமை மற்றும் ஏனைய விபரங்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்.




## மகர ராசி



உத்திராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம்
பெயர் முதல் எழுத்துக்கள் :- போ, ஜ,ஜி,ஜீ, ஜே, ஜோ, கா.க.கீ.

நீங்கள் திடகாத்திரம் பொருந்திய தேக அமைப்பு, முரட்டுத்தனம் பிடிவாதம், சர்வாதிகாரம் கொண்டவர்களாக இருப்பீர்கள். சமமான நிறத்தையும், அளவான உயரத்தையும் உடைய இவர்கள் அலங்காரமாகவே தோற்றமளிப்பீர்கள். இவர்களுடைய பேச்சாற்றலும் செயல் திறனும் காரிய சாதனைகளும் சிறப்புடன் அமைவதால் பலரது பாராட்டையும் பெறுவார்கள். இவர்கள் ஏற்கும் பணிகளை உடனுக்குடன் முடிப்பதில் திறமை உடையவர்கள். தம்மை நாடி வருபவர்களை உபசரிப்பதில் ஆர்வமுடையவர்கள். எந்த செயலின் பின் விளைவுகளையும் முன்கூட்டியே அறியும் ஆற்றல் கொண்டவர்கள். அலட்சியப் போக்கும் அஞ்சாத நெஞ்சுறுதியும், சுயகௌரவமும் இவர்களை விட்டு விலகாததாகவே இருக்கும். சாஸ்திர ஞானமும், கலை ஞானமும் உடையவர்கள். பிறரை பணிய வைப்பதில் அதிக திறமை உடையவர்கள். எதிலும் ஒரு முடிவை எடுத்துவிட்டால் அதை மாற்றிக் கொள்ளவே மாட்டார்கள். அந்த அளவிற்கு உறுதியான மனம் படைத்தவர்கள். பல முறை ஆலோசனை செய்த பிறகே எந்த காரியத்திலும் ஈடுபடுவார்கள். அழகு நற்குணங்களும் பொருந்திய கல்வி அறிவும் உடைய மனைவியைப் பெறுவார்கள். புத்திர வகையினரின் மீது அளவு கடந்த பாசம் உடையவர்கள். தமது சாமர்த்தியத்தினாலும் சிக்கனத்தினாலும் அதிகளவு சொத்து சேர்ப்பார்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களை பற்றி இனிப் பார்ப்போம்.

10இல் உச்ச சனியும், 11இல் உச்ச ராகுவும் போதுமே! உங்களுடைய முயற்சிகள் யாவும் நூற்றுக்கு ஐம்பதான வகையில் வெற்றிகளைக் கொடுக்கும். நண்பர்கள் வகையில் கொஞ்சம் உதவிகரமாக நடந்து கொள்வார்கள். அதிகளவில் உறவினர்கள் வருகையும் விருந்துபசார செலவுகளும் ஏற்படும். வாகன வசதி சுமாராக இருக்கும். கணவன், மனைவி உறவு நிலை அன்பு குறையாமல் இருந்து வரும். உடல் நலம் ஆரோக்கியம் கருதி சிற்சில மருத்துவச் செலவுகள் செய்து குணம் அடையலாம். குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் அனுசரணையுடன் செயற்படுவார்கள். பணவசதி பெருகுவதால் பற்றாக்குறைகள் இருக்காது. புதிய பொன், பொருட்கள் சேரும். சேமிப்பு துரிதமாகவும், பலமாகவும் இருக்கும். கடிதங்கள் நற்செய்திகளை அளிக்கும். பெற்றோர் மூலம் எதிர்பாராத உதவி அனுசரணை ஏற்படும். சகோதர இணக்கம், உதவி, அனுசரணை போன்றவை மகிழ்ச்சிகரமாக இருக்கும். வெளியூர் பிரயாணங்கள் மனதிற்கும், உடலுக்கும் உற்சாகம் அளிக்கும். சொத்துக்கள் மன நிறைவு தரும் புதியன சேர்க்கவும் வாய்ப்பு உண்டு. இடமாற்றம் மகிழ்ச்சி தரும்.

24-01-2012 முதல் 14-04-2012 வரை செவ்வாய் வக்கிரமடைவதால் இக்கால கட்டத்தில் மட்டும் பெருமளவு கெடுபிடி, நெருக்கடி, வேலைப்பளு தோன்றி அலைக்கழிக்கும். பொருள் சேதங்களை ஏற்படுத்தி நட்டப்படக்கூடும். பெரும் பொறுப்புகளை ஏற்காமல் தள்ளிப்போடுவது நிவர்த்தி தரும்.

15-05-2012 முதல் 27-06-2012 வரை சுக்கிரன் வக்கிரம் பெறுவதால் திடீர் தன வரவுகள் ஏற்படும். முகராசி கைராசி நன்கு செயற்படும். பணியில் சுபப் நிலை, வருவாய் உயர்வு, கௌரவ பதவி ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கும் இடமுண்டு.

16-05-2012 முதல் 04-08-2012 வரை சனிபகவான் தமது வக்கிர, சஞ்சாரத்தில் மறுபடி கன்னி ராசியில் இருப்பார். இது காலம் உடல் நலி தோன்றும், சோர்வு, அலைச்சல் குறுக்கிடும். பெற்றோர்க்கு சிரமம் உண்டு. எனினும் பெரும் சிரமம் இல்லை.

செய் தொழில் வகையில் ஏற்பட்டு வந்த சங்கடங்கள் பிற்போக்கான சூழ்நிலைகள் யாவும் தீர்வு பெற்று படிப்படியான முன்னேற்றம் கிடைக்க ஆரம்பிக்கும். அரசாங்க உதவிகள் கிடைக்க பல முறை முயற்சிகள் செய்து பலன் பெறுவீர்கள். புதிய நூதனமான சில முயற்சிகள் கடைப்பிடித்து வியாபாரங்களை விருத்தி செய்யப் பாடுபட்டு பாதி வெற்றிகளை அடைவீர்கள். மேலிட சலுகைகள் அளவோடு கிடைக்கப் பெறுவீர்கள். 17-05-2012 முதல் 5 ஆமிடத்திற்கு வந்து விடுவதால் அது முதல் தொழில் துறையில் நல்லதொரு ஸ்திரத்தன்மை பெற்று விடுவீர்கள். பிறகு எல்லாமே நலம். மொத்தத்தில் இது ஒரு பிடிமானம் உள்ள ஆண்டேயாகும்.

### பெண்களுக்கு

இப்போது நீங்கள் உஷாராக செயற்பட வேண்டும். உடல் ஆரோக்கியத்திற்காக சிற்சில மருத்துவச் செலவுகள் உண்டாகும். கணவன், மனைவி உறவு நிலையில் திருப்திகரமாக இருக்கும். பொன், பொருள், ஆடம்பரப் பொருள் சேர்க்கைகளும் அமோகமாக கிடைக்கப்பெறும். பெற்றோர் வகையில் கொஞ்சம் சங்கடங்கள் உண்டாகி பிறகு சரியாகி விடும். உடன் பிறந்தவர்கள் அனுசரணையாக இருப்பார்கள். 17-05-2012 முதல் குரு பலம் வந்து விடுவதால் திருமணம், புத்திர பாக்யம், பொருளாதார உயர்வு, இருப்பிட சுகம் யாவும் ஒவ்வொன்றாக வேண்டியபடி கிடைக்கப்பெறும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

வருவாய் தாராளமாக ஏற்பட்டு வரும். பதவி உயர்வு பெரு முயற்சியால் கை கூடி வரும். உடன் பணியாற்றுபவர்களால் பக்க பலம் ஏற்படும். இடமாற்றம் விரும்பிய சிறப்புள்ளதாக ஏற்படும். தொழில் கருதிய உழைப்பு முயற்சிகள், பிரயாணங்கள் தொடந்திருக்கும். திடீர் தன வரவு போனஸ் போன்றவை உண்டு. உங்கள் வாக்கு சாதுர்யம், மதிநுட்பம் விசேஷமாக பலன் தரும்.

### வியாபாரிகளுக்கு

பழைய சரக்குகள் நல்ல விலையாகும். பேரங்கள் படியும், கொள்முதல் சுலபமாகும். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். போட்டி எதிர்ப்பாளர்கள் கட்டுப்பட்டிருப்பார்கள். புதிய இடவசதி பெறுவீர்கள். அரசாங்க நிதியுதவி காரியானுகூலம் கிடைக்கப்பெறும். நாட்பட்ட சில பாக்கிகளும் பைசல் செய்யப்படும். பயணங்கள் நல்ல இலாபம் தரும்.

### தொழிலாளர்களுக்கு

வருவாய் பற்றாக்குறை இனி இருக்காது. சக பணியாளர்களுடன் சகஜ நிலை குறையும். அகால போஜனம், அகால உறக்கம் இருக்கக்கூடும். குடும்ப பிரச்சினைகள் தொழிலில் உள்ள ஆர்வம் ஈடுபாட்டை குறைக்கும். அதிக விடுமுறைகளும் இடமிருக்கவே செய்யும்.

### விவசாயிகளுக்கு

அரசாங்க உதவிகள் தாராளமாக இப்போது கிடைப்பதால் காரிய செயற்பாடுகள் யாவற்றையும் வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். புதிய தொழில் நுட்பத்தை கடைப்பிடித்து விவசாயத்தை அபிவிருத்தி செய்ய நல்ல வருவாய் பெருக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

### மாணவர்களுக்கு

இப்போது நீங்கள் முழுக்கவனத்தையும் படிப்பில் செலுத்தினால் மட்டுமே தேர்வில் மார்க் எடுக்க முடியும். தொழில்நுட்பக் கல்விக்காக இப்போது விண்ணப்பம் செய்து வைக்கலாம். கேளிக்கை உல்லாச சுற்றுப் பிரயாணங்கள் போன்றவைகளில் கவனம் செலுத்தக்கூடாது.

# நவக்கிரகத் தோஷம்



**நவக்கிரகங்களால்** விளையும் தீய பலன்களையே ஜோதிட நூல்கள் நவக்கிரகத் தோஷங்கள் என்று கூறுகின்றன. மேற்படி தீயபலன்களைத் தவிர்க்க வேண்டிச் செய்யப்படும் யாகங்கள், விசேட பூஜைகளையே பரிகாரங்கள் என்று சொல்கிறோம். இன்று வரை நீங்கள் கேள்விப்பட்டுள்ள பரிகாரங்களை எல்லாம் 3 வகையில் அடக்கி விடலாம்.

1. எந்தக் கிரகம் தோஷத்தைத தந்துள்ளதோ அதற்குரிய தேவதைக்கு யாகங்கள், பூஜைகள் செய்வது.

2. குறிப்பிட்ட கிரகத்துக்கான திருத்தலத்துக்குச் சென்று பூசித்து வருவது.

3. தானம் வழங்குவது (பூமி தானம், கோ தானம், அன்னதானம் முதலியவை).

1. தேவதைகளுக்கு யாகங்கள்:

யாகம் என்றால் என்ன? நெருப்பை வளர்த்து பல விலையுயர்ந்த பொருட்களை அதில் போட்டு விடுவதே. இதனால் பெருமளவு செவ்வாய்க்குரிய தோஷங்கள் குறையும் (செவ்வாய் நெருப்புக்கு அதிபதி என்பதால்). யாகத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருட்கள் எந்தக் கிரகத்தின் அதிகாரத்துக்குட்பட்டவையோ, அந்தக் கிரகத்தின் தோஷங்களும் குறையும். (உதாரணம்) பட்டாடைகளுக்குச் சுக்ரன் அதிபதி.

செவ்வாய் 2இல், 8-இல், 12-இல் இருந்து தோஷத்தைத் தருவதனால் யாகம், தோஷத்தைக் குறைக்கும் என்று நம்பலாம், ஏனெனில் 2-என்பது தனபாவம், செவ்வாய் நெருப்புக்கு அதிபதி, ஜாதகரின் தனம் நெருப்பில் நாசமாக வேண்டும் என்பது பலன், 8-என்பது ஆயுள்பாவம், பெருநஷ்டங்களைக் காட்டும் இடம், 12-என்பது விரய பாவம், நஷடங்களைக் காட்டும் இடம், இவ்விடங்களில் செவ்வாய் நின்றால் நெருப்பால் நஷ்டங்கள் ஏற்பட வேண்டும் என்பது பலன், யாகம் செய்வதால் செவ்வாய் தன் அதிகாரத்துக்குட்பட்ட நெருப்பால் கண்டதையும் நாசம் செய்து விடுவதற்கு முன்பு நாமே முன் வந்து அக்னிக்குப் பொருட்களைச் சமர்ப்பிக்கிறோம். யாகங்களை நடத்தித்தரும் பிராமணர்களுக்குத் தட்சிணை தருவதால் குருக் கிரகத் தின் தோஷம் குறையும்.

2. கிரகத்தலங்களைத் தரிசிப்பது:

மனிதர்கள் நடமாடும் மீள் மின்ஏற்றக்கூடிய மின்கலங்கள் (றீச்சார்ச் பற்றி), பூஜையறை-மின்சார எடுக்க கூடிய இடம், கோவில்கள்-மின்சார ட்ரான்ஸ் பார்மர்கள், புண்ணியத்தலங்கள்-உப மின்நிலையங்கள், நாம் சரியான நிலையிலிருந்தால் பூஜை அறையிலேயே சக்தியைப் பெறலாம். நம்மில் ஏதோ பிரச்சினையிருக்கிறது என்று வைத்தால், புண்ணியத்தலங்கள் போனாலும் அங்கு எப்படி சக்தியைப் பெறுவது?

3. தானம் வழங்குதல்:

தானம் வழங்கும் பொருள் எந்தக் கிரகத்தின் அதிகாரத்துக்குட்பட்டதோ அந்தக் கிரகத்தின் தோஷம் குறையும். எண்ணெய்-சனி, தங்கம்-குரு, இதே போல் யாருக்குத் தானம் செய்கிறீர்களோ அவரைப் பொறுத்தும் தோஷம் குறையும். ஊனமுற்றோர்-சனி, தீவிபத்தில் சிக்கியவர்-செவ்வாய், பிராமணர்-குரு, ஆக பரிகாரம் என்பது கிரகம் ஏற்படுத்த உள்ள நஷ்டத்தை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வதாகும்.

அதே சமயம் கிரகம் ஏற்படுத்த உள்ள நஷ்டமும்-நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் நஷ்டமும் சமமாக இருக்கவேண்டும், அப்போது தான் தோஷம் குறையும்.

# பொருத்தமான வர்ணங்கள்

**அன்றாட** வாழ்வில் எல்லாவற்றையும் நமக்கு ஏற்றதாக தெரிவு செய்து வாழ்வை செப்பனிட்டுக் கொண்டால் துன்பத்தின் வருகைக்கு அணை போட்டு விடலாம். சில நேரங்களில் நாம் எதைச் செய்யக் கூடாதோ அதனை அடுத்தவர் செய்கிறார் என்ற பொறாமை மற்றும் காழ்ப்புணர்ச்சியால் நாமும் செய்து அல்லலுக்கு ஆளாகுகிறோம்.

நம் ராசிக்கு, லக்னத்திற்கு, பிறந்த தேதிக்கு, நட்சத்திரத்திற்கு, மாதத்திற்கு, பிறந்த வருடத்திற்கு ஏற்ப நிறங்களை உபயோகிப்பது சிறப்பானது. வாகனங்கள், ஆடைகள், வளையல்கள், வீடுகளின் வர்ணங்கள் இவையாவற்றையும் பொருத்தமாகத் தெரிவு செய்தால் சுபிட்ச வாழ்வு வாழலாம்.

**லக்ன வர்ணங்கள்**

மேஷ லக்னத்தில பிறந்தோருக்குச்சுக்கிரன், புதன், சனி ஆகிய கிரக நாதர்கள் பகை உணர்வோடு செயற்படுபவர்கள். வெள்ளை, பச்சை, கறுப்பு ஆகிய நிறங்களை தவிர்த்து விட வேண்டும்.

லக்னம்-ரிஷபத்திற்கு - சிவப்பு, வெள்ளை, இரத்தச் சிவப்பு, மஞ்சள் ராசியானதல்ல. **லக்னம்** மிதுனத்திற்கு சிவப்பு, மஞ்சள், வெள்ளை, வெளிர் மஞ்சள் ராசியானதல்ல. **லக்னம்** கடகத்திற்கு பச்சை, வெள்ளை, கறுப்பு பொருத்தமற்றது. **லக்னம்** சிம்மத்திற்கு-வெள்ளை, பச்சை, கறுப்பு வேண்டாம். **லக்னம் கன்னிக்கு** - சிவப்பு, வெள்ளை, மஞ்சள்-பகை வர்ணம். **லக்னம் துலாத்துக்கு** கருஞ் சிவப்பு, மஞ்சள், வெர்மலியன்-கூடாது. **லக்னம் விருச்சிகத்திற்கு** - வெள்ளை, பச்சை, கறுப்பு, நீலம்-தவிர்க்கலாம். **லக்னம் தனுசு** - வெள்ளை, பச்சை, கறுப்பு, ராசியற்றது. **லக்னம் மகரம்** - சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நல்லதல்ல. **லக்னம் கும்பம** - சிவப்பு, வெள்ளை, வெளிர் மஞ்சள் - பொருந்தாது. **லக்னம் மீனம்**-வெள்ளை, பச்சை, நீலம், கறுப்பு-தீமை யானது.

**ராசியில் பிறந்தவர்கட்கு ராசி வர்ணங்கள்**

மேடம சிவப்பு, கார்மின்-ஸ்கார்லட், சிவப்பில் எல்லா ரகங்களும். **ரிஷபம** எலுமிச்சை-மஞ்சள், வெளிர் மஞ்சள், இள நீலம், மயில் பச்சை. **மிதுனம்** தங்க நிறம், வெள்ளை, செம் மஞ்சள், பச்சை, சில்வர், ஊதா, முத்து வெள்ளை.

**கடகம்** - பச்சை, சில்வர், வெள்ளை, (கண்ணைப் பறிக்கும கடும் வர்ணங்கள் தவிர்க்க வேண்டும்) **சிம்மம** மஞ்சள், செம் மஞ்சள், தங்க நிறம், சிவப்பு, பச்சை. **கன்னி** - வெள்ளை, செம்மஞ்சள், மஞ்சள், சாம்பல், நீலம், ஊதா. **துலாம** வெள்ளை, மஞ்சள், இளஞ்சிவப்பு, (இளம் வர்ணங்கள்) **விருச்சிகம்** மயில் பச்சை, மண்நிறம் - சாம்பல் நிறம். **தனுசு** நீலம், சிவப்பு, ஊதா, கத்திரிப்பூ கலர், இளஞ்சிவப்பு **மகரம**-மண்நிறம், சாம்பல், கறுப்பு, கடல் நீலம், (எல்லாவித கடும் நிறங்கள்). **கும்பம்** நீலம், சாம்பல், மயில் பச்சை. **மீனம்** - லேவண்டர், மாபில் பச்சை நீலம் கலந்த கலவை, வெள்ளை, ஊதா.

**பிறந்த திகதியும், ராசி வர்ணமும்**

(மிக முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போது)

1, 1,0 29, 28 திகதிகளில் பிறந்தவர்கட்கு மஞ்சள் மற்றும் மாலை சூரியன் அடையும்போது காணப்படும் சிவப்பு.

2, 11, 2,0 29 திகதிகளில் பிறந்தவர்கட்கு பச்சை நிறத்தை நாடுபவர்கள்.

3, 12, 21, 30 திகதிகளில் பிறந்தவர்கட்கு தாமரைப் பூ வர்ணம்.

4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கட்கு இளம் மஞ்சள்-கிரிம், சந்தன நிறம்.

5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்த வர்கட்கு இளம் சிவப்பு கட்டங்கள் அமைந்த ஆடைகள் ராசியானது.

6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கட்கு இளம் பச்சை, லைட் சிவப்பு இணைந்த வர்ணம் பொருத்தமானது.

7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கட்கு வானவில்லில் 9 வர்ணங்களுடன் வெள்ளை கலந்தால் ராசியானது.

8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கட்கு கறுப்பு நீலம், இவற்றுள் மஞ்சள் கலந்த ஆடை.

9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கட்கு சிவப்பு, இள நீலம், மஞ்சளில் எல்லா ரகங்களும் பொருத்தமானது.

## நிலாந்தன்

# "தமிழ் தேசியம் வீழ்ச்சியுறவில்லை"

**கவிதை, ஓவியம், நாடகம், விமர் சனம், அரசியல் பத்தி, எழுத்து என பல தளங்களில் தீவிரமான செயற்பாடுடைய நிலாந்தன், வல்லினம் இணைய இதழுக்கு வழங்கியிருந்த செவ்வியின் முதல் பகுதி**

**நேர்காணல் : பிரதீபா, யோ.கர்ணன்**



**கேள்வி :** நீங்கள் பல் துறை சார்ந்த ஆளுமை. உங்கள் இளமைக்காலம் பற்றி, குறிப்பாக உங்கள் ஆளுமை உருவாக்கத்தில் அந்தச் சூழல் செலுத்திய தாக்கம் பற்றி சொல்லுங்கள்?

**நிலாந்தன் :** யுத்தம்தான் என்னை கண்டுபிடித்தது. அல்லது யுத்தத்தை நான் கண்டு பிடித்தேன் என்று வேண்டுமானாலும் சொல்லலாம். வீட்டில் யாரும் என்னைக் கண்டுபிடிக்கவில்லை. பாடசாலையிலும் யாரும் என்னைக் கண்டு பிடிக்கவில்லை. ஏடு தொடங்கப்பட்ட அன்றே அடிக்கப்பட்டவன் நான். அப்பொழுது எனக்கு மூன்று வயதிருக்கும். எனக்கு ஏடு தொடக்குவதற்காக ஊரிலுள்ள சிறு பாடசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த ஆசிரியர் எனக்கு ஏடு தொடக்க முற்பட்டார். நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். நீண்ட நேர முயற்சிக்குப் பின் அவர் சலித்துப் போய் "உங்களுடைய பிள்ளைக்கு என்னால் ஏடு தொடக்க முடியாது. நீங்களே கொண்டு போய் ஏட்டை தொடக்குங்கள்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார். இயலாமையுடனும், அவமானத்துடனும் என்னை வீட்டுக்கு கூட்டி வந்த தகப்பனார் தானே எனக்கு ஏடு தொடக்க முயற்சித்தார். எங்களுடைய வீட்டில் ஒரு சிறு காளி கோயிலுண்டு. அதில் வைத்து எனக்கு ஏடு தொடக்க முயற்சித்தார். அப்பொழுதும் நான் உடன்படவில்லை. நயத்தாலும், பயத்தாலும் முயற்சித்தார்கள். நான் மறுத்துவிட்டேன். பொறுமையிழந்த எனது தந்தை என்னை தாறுமாறாக அடித்துவிட்டு "இதோ நான் கொழும்பிற்குப்போகிறேன்" எனக் கூறி தனது பயணப்பையையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் போகலானார். அப்பொழுது அவர் கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டு வாசலை கடக்கும் போதுதான் நான் ஏடு தொடக்க சம்மதித்தேன். அப்பொழுது கூட எனது தகப்பனார் ஏடு தொடக்கியதாக ஞாபகமில்லை. நானே எதையோ அரிசியில் எழுதினேன்.

இப்படித்தான் தொடங்கியது எனது கற்றல். இதிலிருந்து தொடங்கி அதிகாரத்திற்கும் தண்டனைகளுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நம்பிக்கைகளுக்கும் ஸ்தாபிக்கப்பட்ட புனிதங்களுக்கும் எதிராக உருவானேன். எல்லாருமே, எல்லாமுமே என்னை, எனது இயல்பிற்கு மாறாக வளைக்கவோ, முறிக்கவோ முயற்சிப்பதாகவே எனக்குத் தோன்றியது. இதனால் தொடக்கத்திலிருந்தே ஒரு முரணியாக, ஒத்தோட மறுப்பவனாக, புனிதங்களை இகழ்பவனாக வளரத் தொடங்கினேன். வீட்டிலும் யாரும் என்னைக் கண்டு பிடிக்கவில்லை. பாடசாலையிலும் யாருமென்னைக் கண்டுபிடிக்கவில்லை. யுத்தமதான் என்னைக் கண்டுபிடித்தது. எனக்குள்ளிருந்த தீராக்கோபத்திற்கு யுத்தம்தான் ஒரு பொருத்தமான அரங்கத்தை உருவாக்கித்தந்தது. யுத்தம் என்னை செதுக்கியது. மு.திருநாவுக்கரசு, சு.வில்வரத்தினம், மு..பொன்னம்பலம் போன்ற பலரையும் யுத்தம்தான் எனக்கு அறிமுகப்படுத்தியது. இவர்களினூடாகவே அ.யேசுராசாவும், பத்மநாப ஐயரும் மாற்குவும் ஏனையவர்களும் அறிமுகமானார்கள்.

இவர்கள் எல்லோருமே என்னை ஏதோ ஒரு விதத்தில் செதுக்கினார்கள். யுத்தம் என்னை சனங்களிற்குள் இறக்கியது. அது என்னை சனங்களின் மொழியிலேயே பேசத்தூண்டியது. நான் வழமைகளையும் மரபுகளையும் மீறத்தேவையான துணிச்சலையும் கோட்பாட்டு விளக்கத்தையும் பெற்றேன். இங்கிருந்து உருவானவைகள்தான் எனது பரிசோதனைகள். யுத்தம் எனது வேர்களை அறுத்தது. சதா இடம்பெயர வைத்தது. பாண்டவரை விட பெரிய வனவாசம் எனக்கு. வயதுகளை இழந்து வனங்களிடை திரிந்தேன். கனவுகளை நம்பி, யாகக் குதிரைகளைத் தொலைத்தேன். அஞ்ஞான வாசங்கள், வனவாசங்கள் தலைமறைவுக் காலங்கள் உறங்குகாலங்கள் என எழுச்சியும் வீழ்ச்சியும் மாறிமாறி வந்தன. இத்தகைய மறைவுகாலங்கள் உறங்குகாலங்கள் முடியும் போதெல்லாம் எதையாவது எழுதிக்கொண்டோ, எதையாவது சொல்லிக் கொண்டோ எதையாவது வரைந்து கொண்டோ வெளிப்படுவேன். எதைச் சொல்கிறேன், எப்படிச்சொல்கிறேன் என்பதையெல்லாம் குறிப்பிட்ட மறைவு காலமே தீர்மானிக்கிறது. சிலசமயம் நிறங்களினூடாக வெளிப்படுவேன். சில சமயம் வார்த்தைகளினூடாக வெளிப்படுவேன். சில சமயம் நாடகத்தினூடாக வெளிப்படுவேன். ஆனால் அதற்காக நானொரு கவிஞனோ, ஓவியனோ, காட்டூனிஸ்டோ, ஆய்வாளனோ அல்ல. நான் இன்னமும் செதுக்கி முடிக்கப்படாத ஒரு சிற்பம். அவ்வளவுதான்.

**கேள்வி :** "மரணத்துள் வாழ்வோம்" என்ற ஈழக்கவிஞர்களின் தொகுப்பில் இடம்பெற்ற "கடலம்மா" என்ற கவிதை தான் முதன்முதலில் உங்கள் பற்றிய பரவலான கவனத்தை ஈர்த்தது. ஈழத் தமிழர்களின் பெரும் சோகங்களில் ஒன்றான "குமுதினிப்படகு படுகொலை" பற்றிய அந்தக் கவிதையே, அந்தச் சம்பவம் குறித்த அதிக அதிர்வை ஏற்படுத்திய படைப்பாக பரவலாக குறிப்பிடப்படுகிறது. அதை எழுதியதற்கான சூழ்நிலை மற்றும் அந்த நாட்கள் பற்றி சொல்லுங்கள்?

**நிலாந்தன் :** குமுதினிப்படகில் கொல்லப்பட்டவர்களின் இறுதிச்சடங்கில் உதவுவதற்காக தீவுப்பகுதி வர்த்தகர்களிடம் இருந்து பணம் சேர்க்கப்பட்டது. இந்தப் பணத்தில் செலவளிக்கப்பட்டது போக எஞ்சிய மிகுதியை என்ன செய்வது என்று யோசிக்கப்பட்டது. அந்தச் சிறுதொகைக்கு அஞ்சலித் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடுவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதில் மூத்த கவிஞர்களாக சு.வி, மு.பொ போன்றவர்களது கவிதையை போட்டு எஞ்சியிருந்த இடத்தை நிரப்புவதற்காக "கடலம்மா" போடப்பட்டது. இடத்தை நிரப்ப எழுதப்பட்டதே அது. மு.பொவும், சு.வியும் அதைப் பார்த்து விட்டு பெரிதும் பாராட்டினார்கள். யேசுராசா அதை அலையில் போட்டார். ஐயர் அதை மரணத்தில் வாழ்வோம் தொகுப்பில் போட்டார். ஆனால் இப்பொழுது திரும்பிப் பார்க்கையில் தெரிகிறது, அந்த எழுத்தின் கடைசி வரிகளில் நம்பிக்கை வலிந்து செருகப்பட்டிருக்கிறது. அது இயல்பாக முடியவில்லை.

**கேள்வி :** "மரணத்துள் வாழ்வோம்" உக்கிரமாய் வலுப்பெற்ற 1980 களின் நடுப்பகுதியை பிரதிபலித்த இலக்கிய பிரதி. அந்தத் தொகுதியில் எழுதிய பல கவிஞர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு சிலரைத்தவிர, பலரும் மரணத்துள் வாழ முடியாமல் புலம்பெயர்ந்து போயினர். மரணத்துள் வாழ்ந்து, இறுதிப் போர் வரை யுத்தத்தினுள் வாழ்ந்த உங்களது அனுபவத்தில் மரணத்துள் வாழ்வது என்பது என்னவாய் அர்த்தப்பட்டது? களத்தில் போர் நடக்காத இன்றைய பொழுதில் அதை எவ்வாறு எதிர்கொள்ள முடிகிறது?

**நிலாந்தன் :** மரணத்தின் ருசி மிகத் தெரிந்த மக்களில் நானுமொருவன் என்பதினால் சொல்கிறேன். வாழ்க்கை மகத்தானது. இன்பமானது. வாழ்ந்து கடக்கப்பட வேண்டியது. எவ்வளவுக்கெவ்வளவு மரணத்தின் ருசி தெரிகிறதோ அவ்வளவிற்கவ்வளவு உயிரின் பெறுமதியும் தெரியவரும். ட்ரொட்ஸ்கி கூறியது போல "ஒரு விடுதலைப் போராட்டத்திற்காக சாகத் தயாரக இருந்தால் மட்டும் போதாது. வாழத் தயாராகவும் இருக்க வேண்டும்."

**கேள்வி :** ஈழவிடுதலைப் போராட்டத்தில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டிருந்த-யாழ்ப்பாணத்தை மையமாய் வைத்து சிந்தித்த தலைமைகளின் தவறுகள் மாற்று அரசியல் தரப்புக்களின் கடும்விமர்சனத்திற்கு உள்ளானவை. போர்நிறுத்த காலத்தில் கூட பிரதேச வாதம் போராட்டத்தில் பாரியதொரு வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்திருந்தது. இந்த விமர்சனங்கள் குறித்த உங்கள் பார்வை என்ன?

**நிலாந்தன் :** ஈழத்தமிழ் ஆயுதப் போராட்டத்தின் தொடக்கம், அது வளர்த்தெடுக்கப்பட்ட களம், அது வளர்த்தெடுக்கப்பட்ட விதம் மற்றும் அது அதிகம் பிரதிநிதித்துவப்படுத்திய படித்த மத்தியதர வர்க்கம் எது என்பவற்றின் அடிப்படையில் பார்த்தால் யாழ்ப்பாண மைய கண்ணோட்டம் எனப்படுவது தொடக்க காலங்களில் ஒரு சமூக பொருளாதார அரசியல் யதார்த்தம் என்றோ அல்லது அது ஒரு படைத்துறை யதார்த்தம் என்றோதான் கூற வேண்டும்.

படைத்துறைத் தீர்மானங்களிற்கு கீழ்ப் படிந்தே அரசியல் தீர்மானங்களை எடுகக வேண்டும் என்ற தலைகீழ் சமன்பாட்டின் படி நிகழ்த்தப்பட்ட ஆயுதப்போராட்டத்தில் படைத்துறை பெரும் செயல்களை பொறுத்தவரை அதாவது நவீன தமிழ் வீரம் மற்றும் தமிழ் தியாகத்திற்கு மேற்படி யாழ்ப்பாண மைய கண்ணோட்டம் இடைஞ்சலாக இருக்கவில்லை.

ஆனால் ரணில்-பிரபா உடன்படிக்கைக்குப்பின் உருவாகிய புதிய சூழ்நிலையில் பிரதேச வேறுபாடுகள் பிரதேசவாதமாக மாறக்கூடிய ஏதுநிலைகளை உய்த்துணர்வதில் போதியளவு தீர்க்கதரிசனம் காட்டப்படவில்லை. அது போலவே பிரதேச வாதமானது ஒரு அருவருப்பான ஆயுத மோதலாக அல்லது சகோதரச் சண்டையாக வெடித்தெழுவதை தடுப்பதிலும் போதியளவு தீர்க்கதரிசனம் காட்டப்படவில்லை. இதுவே நாலாம் கட்ட ஈழப்போரின் தோல்விக்குரிய பிரதான காரணங்களில் ஒன்றாக மாறியது.

யாழ்ப்பாண மையக் கண்ணோட்டம் அலலது படைத்துறைத் தீர்மானங்களிறகு கீழ்ப்படியும் அரசியல் தீர்மானம் பிரதேச வேறுபாடுகள் பிரதேசவாதமாக வெடித்துக் கிளம்பியமை அல்லது பிரதேச வாதத்தை ஆயுதமோதலாக வளர விட்டமை போன்ற எல்லா அம்சங்களும் ஒரே வேரிலிருந்து வெளிக் கிளம்புகின்றன. அது என்னவெனில் தமிழ்த்தேசியத்தின் போதாமைகளே. அது பற்றி பின்வரும் கேள்வி ஒன்றிற்கு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

**கேள்வி :** யாழ்ப்பாண இடப்பெயர்வு உள்ளிட்ட கடந்தகாலத்தின் பல இடப்பெயர்வுகளை உங்கள் படைப்புகள் உச்ச படைப்பெழுச்சியுடன் பதிவு செய்திருக்கின்றன.

அவற்றில் மக்களது பாடுகளை, அவர்கள் கொண்ட இழப்பின் துயரங்களை எல்லாம் எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடிந்திருக்கிறது. உங்கள் படைப்புகளில்-அந்த நம்பிக்கை நீங்கள் நம்பிய அரசியலில் இருந்து வந்தது. இறுதிப்போர் உக்கிரமாய்த் தொடர்ந்த போது கூட உங்களது வரிகள் நினைவிற்கு வந்திருந்தன.

காடே
நல்ல காடே
அவர்களை கைவிடாதே.
கடலே
நல்ல
கடலே
அவர்களை கைவிடாதே
மழை
நீச மழை
எனது மக்களை நெருக்குகிறதே
குற்றமற்ற எனது மக்கள்
துக்கத்தால்
சித்தப்பிரமை பிடித்தவர்
போலாயினரே
வனப்பெலா மிழந்து
விதவைகள் போலவே
மண்நகரின் தாழ்வாரத்தில்
மழையில் நனைந்து நனைந்து..

இப்படியான பாதிப்பூட்டும் பதிவுகள் வன்னி மான்மியத்தில் குறிப்பாக மண்பட்டினங்கள் போன்ற கவிதைகளில் இருந்தன. ஆனால் காடும், கடலும் சகலதரப்புக்களும் கைவிட்டு முள்ளிவாய்க்காலுக்குள் வந்தடங்கிய மக்களின் இடப்பெயர்வு, இறுதிப்போர் மற்றும் அதன் முடிவு- இவ்வாறான ஒரு மனித அழிவைக் கண்ட உங்களால் - உங்கள் படைப்புக்களாய் அந்த அனுபவத்தை எவ்வாறு எதிர்கொள்ள முடிகிறது? முக்கியமாக நீங்கள் நம்பிய ஒரு அரசியலின் வீழ்ச்சியின் பிற்பாடு? எதிர் காலம் குறித்த உங்கள் நம்பிக்கைகள் எதுவும் புலப்படாத காலத்தில்?

**நிலாந்தன் :** நாம் நம்பிய அரசியல் வீழ்ச்சியுற்றதாக யார் சொன்னது? நாம் நம்பிய அரசியல் என்று நீங்கள் கருதுவது எதனை? எல்லா படைத்துறைத் தோல்விகளும் அரசியல் தோல்விகளாகி விடுவதில்லை.

எல்லாப் பிரச்சினைகளிற்கும் யுத்த களமே இறுதித் தீர்வாக அமைந்து விடுவதுமில்லை. ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக உருவாகி வரும் புதிய பிராந்திய மற்றும் சர்வதேச சூழலானது தமிழர்களிற்கு பிரகாசமான வாய்ப்புகளை திறந்து வைத்திருக்கிறது. வீரத்தை தூக்கியது ஒரு காலம், அது ஒரு வீரயுகம். அது முடிந்து விட்டது. இனி அறிவைத் தூக்க வேண்டும். இனி அறிவுதான் ஆயுதம். அறிவுதான் சக்தி. அறிவுதான் பலம். புத்திமானே பலவான்.

# ஐ.தே.க.யாப்பில் மாற்றம் கோருகின்றார் தயாசிறி



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட எவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் உயர் பதவியொன்றை பெறக்கூடிய விதத்தில் கட்சி யாப்பின் 8-1 ஆவது பிரிவைத் திருத்துமாறு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரியுள்ளார்.


எதிர்காலத்தில் ஐ.தே.கவில் இணையுமாறு சரத் பொன்சேகா அழைக்கப்பட்டாலும் யாப்பின் மேற்படி சரத்தின் காரணமாக அவர் உயர் பதவியை வகிக்க முடியாது போகலாம் என தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் யாப்பின் 8-1 ஆவது சரத்தின்படி, கட்சியின் உயர் பதவிக்குப் போட்டியிடும் அனைவரும் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிப்பவர்களாக இருக்க வேண்டும். இது கட்சிக்கு பிரதிகூலத்தை ஏற்படுத்தும் என தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

தற்போது அரசாங்கத்திலுள்ளவர்கள் எதிர்காலத்தில் ஐ.தே.க.வுக்கு மாறினால் கட்சியில் உயர்பதவியை பெறுவதற்கும் இது தடையாக அமைந்துவிடும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க ஆகியோரின் காலத்தில் இந்தச் சரத்து இருந்திருந்தால் அவர்கள் ஐ.தே.க.வின் தலைவர்களாக இருந்திருக்கமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் சில அமைப்புகள் மீளமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் 2005 ஆம் ஆண்டின் பின் இது நடைபெறவில்லை எனவும் தெரிவித்தார். கட்சிக்குள் உள்ள பல எதிரிகளுடன் போராடுவதை விட பிரதான எதிர்க்கட்சியிலுள்ள பொது எதிரிக்காகப் போராடுவது இப்போது முக்கியம் எனவும் அவர் கூறினார்.

# வீட்டிலேயே பொருட்களை ஒப்படைப்பதற்கு ரயில் திணைக்களம் விரைதூதர் சேவை



(கொழும்பு)

போக்குவரத்துக்காக ஒப்படைக்கப்படும் பொதிகளை வீடுகளுக்கே விநியோகிக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இந்தத் திட்டத்தை நடைமுறைபடுத்த உள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொதிகள் போக்குவரத்தின்போது அந்தந்த ரயில் நிலையங்களுக்கு மாத்திரமே கொண்டு செல்லப்படுகின்றன. இலங்கை ரயில்வே திணைக்களம் தனியார் நிறுவனமொன்றுடன் இணைந்து இந்த நடவடிக்கைக்கான திட்டங்களைத் தயாரித்து வருவதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

ரயிலில் ஒப்படைக்கப்படுகின்ற பொதி, தபால் போன்றவற்றை வீடுகளுக்கே கொண்டு சென்று ஒப்படைக்கும் விரைதூதர் சேவையை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் விஜய சமரசிங்க கூறினார்.

இதன் மூலம் பயணிகள் தங்கள் பொருட்களையும், சேவைகளையும் இலகுவில் பரிமாறிக்கொள்வதற்கான வழிமுறை ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்களை ஏமாற்றமுடியாது




(கொழும்பு)

பொதுமக்களை ஒரு போதும் ஏமாற்ற முடியாது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். மக்கள் அனைத்து அரசியல் தரப்பினருக்கு மேலான ஒரு இடத்தில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் அரசியல் உள்ளிட்ட நாட்டின் செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் சபாநாயகர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

# பேராதனைப் பல்கலையில் பகிடிவதை மாணவியின் மனநிலை பாதிப்பு



(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட மாணவர்கள் மேற்கொண்ட பகிடிவதையினால் கலைப்பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவி ஒருவரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வாக்கு மூலமொன்றைப் பதிவு செய்து கொள்ள முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்ட மாணவியின் மனநிலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மாணவி பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டது முதல் சிரேஸ்ட மாணவர்கள் பல்வேறு வழிகளில் பகிடிவதை என்ற பெயரில் அவரை துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுவதுடன் குறித்த மாணவி பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டிருப்பதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பேராதனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பல்கலைக்கழகங்களுக்குள் இத்தகைய துஷ்பிரயோக சம்பவங்கள் இடம் பெறுவதில்லை என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்ட குறிப்பிட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது என இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி மஹீம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்களை அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 100 பணியாளர்கள் நாடு திரும்புகின்றனர்

(கொழும்பு)

குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் தங்கியுள்ள 100 இலங்கைப் பணியாளர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குவைத் அரசின் அனுமதியுடன் இந்த 100 பேரும் நேற்று இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக குவைட்டிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

நாடு திரும்பியவர்களின் விமான பயணச் சீட்டுச் செலவுகளை குவைத அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. வேலை வாய்ப்புக்காகச் சென்று குவைத்தில் நிர்க்கதியான சுமார் 500 இற்கும் மேற்பட்ட இலங்கை பணியாளர்கள் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்மலானையில் ஒருவர் வெட்டிக்கொலை



(கொழும்பு)

இரத்மலானை - யசோராபுர - 9ஆம் குடியிருப்புப் பகுதியில் கூரிய ஆயுதங்களால் வெட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இக்கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக இரத்மலானை பொலிஸார் தெரிவித்தனர்.

பலர் இணைந்து இவரை வெட்டிக் கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பிலியந்தலை - மடபான பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு இன்னும் பலரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலங்கையுடன் உறவை வலுப்படுத்த பாகிஸ்தான் விருப்பம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையுடனான பொருளாதார நட்புறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. இலங்கை விமானப்படை அதிகாரி சீப் மார்ஷல் W.D.R.M.J.கூனேதிலகவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வலய மட்டத்தில் சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்த இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு உறுதுணையாக அமையும் என பாகிஸ்தான் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரி தெரிவித்துள்ளார். மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் பாகிஸ்தான் ஜனாதிபதி திருப்தி வெளியிட்டுள்ளார்.

# ரூபாய் பெறுமதி குறைப்பால் இலங்கையின் கடன் சுமை அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ரூபாவின் மதிப்பு 3 ரூபாய்களினால் குறைக்கப்பட்டமையை அடுத்து இலங்கையின் கடன் அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதன்படி, பொதுமக்கள் மீது மேலும் 81 பில்லியன் ரூபாய்கள் சுமை ஏற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். மேலும்,

ஏற்கனவே இலங்கை பொதுமக்கள் மீதான கடன்தொகை ரூபாயின் மதிப்பு கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் குறைக்கப்பட்ட பின்னர் 5200 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசாங்கம் மக்கள் நலன் கருதாது சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்திற்கு ஏற்பவே இந்த நாணய மதிப்பிறக்கத்தை மேற்கொண்டுள்ளதாகவும் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரூபாயின் மதிப்பிறக்கத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள போதிலும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோர் இத்தீர்மானத்துக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலையில் உபவேந்தர்கள் மாநாடு

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மாநாடு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ராஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தர் கே.ஏ.நந்தசேன தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. இதில் 13 பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர். நிகழ்வில் ராஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தரை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் அந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட்டமைக்கு எதிராக இதன்போது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை மூலமாக இணக்கம் பெறப்பட வேண்டுமே தவிர உபவேந்தர்களைத் தடுத்து வைக்கும் முறையற்ற செயற்பாடுகள் இனியொருபோதும் இடம்பெறக் கூடாது என கேட்டுக் கொள்ளப்பட்டது.

மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கருத்துப் பரிமாறப்பட்டது.

# கல்வி அமைச்சுக்கு முன்பாக 3 தொழிற்சங்கங்கள் போராட்டம்



(கொழும்பு)

தமது பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி மூன்று தொழிற்சங்கங்கள் கல்வி அமைசசுக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

கல்வி நிர்வாக சேவையில் கடமை நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சங்கம், அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளன.

தமது பதவிக்கான நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரி கல்வி நிர்வாக சேவையின் கடமை நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சங்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபடுகின்றது. தமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 நாட்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை பிரச்சினைக்கான தீர்வினை வழங்க அதிகாரிகள் முன்வரவில்லை என அந்தச் சங்கத்தின் செயலாளர் டப்ளியூ.ஜி.ஏ.வனிகரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனிடையே அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணாவிரதப் பேராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்குமாறு வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டம் மூன்று நாட்களைக் கடந்துள்ளதாக அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஈ.எம்.ஜே. எஸ்.டி.சேரம் தெரிவித்துள்ளார். நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் 68 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என சங்கத்தின் தலைவர் எஸ்.சிவஞானசுந்தரம் கூறியுள்ளார். கல்வி அமைச்சுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்பாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவிடம் வினவியபோது அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# முன்னாள் போராளிகளின் மறுவாழ்வுக்கு பிரித்தானியா மேலும் உதவி



(கொழும்பு)

அரசாங்கத்தின் புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து விடுதலையான முன்னாள் போராளிகளின் மீள்வாழ்வுத் திட்டத்திற்கென பிரித்தானியா மேலும் 150,000 ஸ்ரேலிங் பவுன்களை உதவியளித்துள்ளது.


முன்னாள் போராளிகளின் மறுவாழ்வுத் திட்டத்திற்கு மாத்திரம் இவ்வருடத்தில் பிரித்தானியா 650,000 ஸ்ரேலிங் பவுன்களை வழங்கியுள்ளது. இலங்கை பெறுமதியில் அது 116 மில்லியன் ரூபாவாகும்.

முன்னாள் போராளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம நாட்டில் சமாதானத்தை எதிர்பார்ப்பதாக பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம் பெற்றுவரும் பகுதிகளைப் பார்வையிட்டதாகவும் வடக்கு மக்கள் சிலரை சந்தித்து கலந்துரையாட வாய்ப்புக் கிட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் தெல்லிப்பளையில் உள்ள புனர்வாழ்வு மத்திய நிலையத்திற்கு விஜயம் செய்திருந்ததோடு அங்கு அரசியல் தலைவர்கள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

# பண்டாரவன்னியன் நற்பணிமன்றம் ஆரம்பம்



(வவுனியா)

வன்னிப்பிரதேசத்தில் பல்வேறு வகையிலும் பாதிப்படைந்த மக்களிற்கு கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் உதவும் வகையில் பண்டார வன்னியன் நற்பணி மன்றம் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னாள் வங்கி முகாமையாளர் சீ.சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பண்டாரவன்னியன் பற்றிய கண்ணோட்டத்தினை வரலாற்று ஆய்வாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அருணா செல்லத்துரை நிகழ்த்தியிருந்ததுடன் சிறப்புரையாற்றினார்.

வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் நற்பணி மன்றம் செயற்படுத்தவேண்டிய நடைமுறைகள் அதற்கான பதிவு தொடர்பிலும் தெரிவித்தார்.

நற்பணி மன்றத்தின் நிர்வாக குழுவாக தலைவராக ப.சத்திய மூர்த்தியும் செயலாளராக மா.றோய ஜெயக்குமாரும் பொருளாளராக மு. ஜீவகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவராக இறைபணிச செம்மல் வை.செ. தேவராஜாவும் உப செயலாளராக சி.சிவசோதியும் நிர்வாக உறுப்பினர்களாக வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், வைத்திய கலாநிதி பி.சுதாகர்ன், பி.தற்பரன், ரி.நாகேந்திரராசா, அமிர்தலிங்கம், கே. சரவணபவானந்தராஜா, எஸ்.என்.ஜி. நாதன், த.பிறேம்குமார், எஸ் ஞர்னப்பிரகாசம், க.பெரியண்ணன், இரா.சுப்பிரமணியம், ஆர். குகனேஸ்வரன், கா.ஜெயராசா, செ.சந்திரகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், வர்த்தகர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், பல்வேறு துறைசார்ந்தவர்கள் சமூக ஆர்வலர்கள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (125)

# ஆற்றில் பயணிகள் படகுச் சேவை

(கொழும்பு)

களுகங்கையூடாக களுத்துறை வரை பயணிகள் படகுச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகில் ஒருதடவையில் 50 பேர் வரை பயணிக்க முடியும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒரு படகு, சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மேலும் சில படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் புலத்சிங்கல களுத்துறை பயணிகள் படகுச் சேவையின் பிரதான ஏற்பாட்டாளர் ஐ.எஸ். டப்ளியூ.கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# மன்னாரில் முறைகேடான அரச நியமனமாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்க தீர்மானம்



மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் முறைகேடான அரச நியமங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 14ஆம் திகதி அம்மாவட்டத்தில் எதிர்ப்பு ஊர்வலமொன்று நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தேசித்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பிலும் இப்பேரணி நடத்துவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் மன்னார் நகர சபையில் நடைபெற்றது. எதிர்வரும் 14ஆம் திகதி எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பாதாள உலக உறுப்பினர் கடத்தல்



(கொழும்பு)

பாதாள உலகக் குழுவின் உறுப்பினர் எனக் கூறப்படும் நேவி ரூபா என்ற ருவான் சந்திமால் மற்றும் அவரது நண்பர் ஆகியோர் வெள்ளை வேன் ஒன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

தனது கணவர், தம்மிக்க என்ற அவரது நண்பருடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தனக்கு அறியகிடைத்தாக அவரது மனைவி நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நேவி ருவான் அண்மையில், விடுதலை பெற்றதுடன், கடந்த மூன்று மாதகாலமாக வரக்காபொல பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார். இவர் பல அரசியல்வாதிகளுடன் நெருங்கி பழகியவர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடத்தல் சம்பவம் குறித்து நேவி ருவனின் மனைவியான லக்க்ஷிகா வாரக்காபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். 252-5369 என்ற இலக்கம் கொண்ட வெள்ளை வானிலேயே இவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நிர்மாணப் பணிகள் 20 வீதம் நிறைவு

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து மாத்தறை வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் சுமார் 20 வீதம் நிறைவுபெற்றுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து மாத்தறை வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாகும் என அதிகார சபையின் தலைவர் ஆர்.டபிள்யூ.ஆர். பிறேமசிறி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காலியின் பின்னதுாவ எனும் இடத்திலிருந்து மாத்தறையின் கொடகம வரையிலான நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்தில் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து மக்களின் பாவனைக்காக வீதியைத் திறந்துவிட உத்தேசித்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு சவுதியில் மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

இந்திய - இலங்கை நாடுகளைச் சேர்ந்த மூன்று பேருக்கு சவுதி அரேபியா, ஜித்தா நீதிமன்றில் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேறு எட்டு பேருக்கு கசையடிகளுடன், 5 வருடசிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. சவுதி அரேபியா, ஜித்தா நகரில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காணி விற்பனை முகவர் ஒருவரை கொலை செய்த மற்றும் கொள்ளைச் சம்பவத்தில் தொடர்பு கொண்டமை தொடர்பிலேயே இந்தத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. ஜித்தா நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட குழாம் நேற்றுமுன்தினம் இந்த தண்டனைகள் குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளது.


இவ்வாறு தண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்டவர்களுள் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொலையுடன் தொடர்புடைய 11 பேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என கொலையுண்டவர் தரப்பு வழக்கறிஞர்கள் கோரியிருந்தனர்.

இருந்தபோதும், கொலையுடன் நேரடி தொடர்புடைய 3 பேருக்கு மரண தண் டனைத் தீர்ப்பும், ஏனையோருக்கு தலா ஆயிரம் கசையடிகளும், 5 வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

கயான், இஷக், பர்ஷான் ஆகியோருக்கே மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவருக்கு 400 கசையடிகளும், 4 வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





நோர்வேயின் அறிக்கையில் வெளியார் தலையீடுகளினால் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் மிகவும் விபரமாகவே தரப்பட்டுள்ளன. குறிப்பாக மேற்குலக நாடுகள் விசேடமாக பிரித்தானியா போன்ற நாடுகள் இப் பிரச்சினையில் ஈடுபடுவதில் பலத்த சந்தேகம் காணப்படுகிறது. வெளிநாடுகளின் தலையீடுகளை அரசியலாக்கி நிலைமைகளைக்

## ஒட்டிக் கொண்டிருக்கும் பிரிவினைவாத சக்திகள்!

குழப்ப அரசியல் கட்சிகள் எப்போதும் தயாராக உள்ளன. நோர்வேயின் கருத்துப்படி சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயின் ஈடுபாடுகளைப் பயன்படுத்தி ஜே.வி.பி தனது அரசியலை வளர்த்து பல பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றுக்கொண்டது. அதே போன்று ஜாதிக ஹெல உறுமய இன் தோற்றம் இப் பின்னணியில்தான் உருவாகியது.

இவை பெரும்பான்மை சிங்கள மக்களை தொடர்ந்தும் சிங்கள தேசியவாதிகளிடம் தள்ளுவதாகவே முடிவடைகிறது. பெரும்பான்மை சிங்கள மக்கள் இப் பிரச்சினையில் சாதகமான முடிவை நோக்கிச் செல்லுவதற்கு தமிழ் மக்கள் தமது பங்கினைச் செலுத்த வேண்டும். பிரிவினைக் கோரிக்கைகள் அல்லது எந்தவித விளக்கங்களும் அற்ற சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் என்பன சாதகமான புறச்சூழலை உருவாக்க உதவமாட்டா. மகிந்த ராஜபக்ஷ அரசில் சிங்கள தேசியவாத பிற்போக்கு சக்திகள் ஒட்டிக்கொண்டிருப்பது போலவே தமிழ் அரசியல் சக்திகளுடன் பிரிவினைவாத பிற்போக்கு சக்திகளும் ஒட்டிக் கொண்டுள்ளன. இரு சாராரும் தமது அரசியல் நலன்களுக்காக இத் தீய சக்திகளோடு படுக்கையை பங்குபோட்டு வருகின்றனர். இந்த சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இதற்கான ஒரேவழி தேசத்தின் பொருளாதார சுபீட்சத்திற்காக, வறுமையை ஒழிப்பதற்காக, வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்காக, தேசத்தின் மூல வளங்களைப் பாதுகாப்பதற்காக அமையும் முன்னணியில் சிறுபான்மை தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளும் இணைக்கப்படும் போதுதான் இவை சாத்தியமாகும். இதற்காக நாம உழைக்க வேண்டும். நாம் எண்ணும் மாற்றங்கள் சாத்தியமாக வேண்டுமெனில் நாம் பங்காளர்களாக வேண்டும்.

இந்தியா நண்பனா? எதிரியா? என்பது பட்டிமன்றம் நடத்த உதவலாம். ஆனால் ஒவ்வொருவரும் பொறுப்புள்ள பிரஜை என்ற அளவுகோலிற்குள் வாழ வேண்டுமெனில் எமது கருத்துக்கள் யாரைப் பாதிக்கும்? எனபது குறித்துப் புரிந்திருத்தல் அவசியம். இந்தியாவை நம்புவது துரோகம் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. இந்தியா தொடர்பாக எமது அணுகுமுறை எது? என வினவப்படுகிறது. இந்தியாவுடனான உறவுகளை அல்லது மேற்குலக நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்துவதற்கு முதல் இலங்கினிடையே நெருக்கமான உறவுகளை ஏற்படுத்த வேண்டும். புலமான விட்டுக்கொடுப்பில்லாத யதார்த்த பூர்வமான தீர்வுகளை முன்வைக்கும் அரசியல் தலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். இது காலம் எடுக்கும் யோசனை என சிலர் நிராகரிக்கலாம். ஆனால் புலிகளிடம் 30 வருடகாலத்தைக் கொடுத்துவிட்டு எந்த வித பங்களிப்பும் இல்லாமல் இருந்துவிட்டு கையைப் பிசைந்த நிலை இம் முயற்சியில் ஏற்படாது. 'நிரந்தர தீர்வை நோக்கி சமூக கட்டுமானங்களை நிர்மாணித்துக் கொண்டுதான் இந்தியா பற்றி பேசவேண்டும். இல்லையெனில் குரங்கு அப்பம் பகிர்ந்த நிலைதான். முதலில் பலமான அரசியல் தலைமையின் உருவாக்கத்தை நோக்கிப் பேசுவோம். அந்தத் தலைமை இந்தியா நண்பனா? எதிரியா? என்பதைத் தீர்மானிக்கட்டும்.

- வி.சிவலிங்கம் கட்டுரை"லிருந்து....

# கனிமொழியே வருக!



கனிமொழிக்கு மாபெரும் வரவேற்பு தர பலரும் தயாராகிவிடடார்கள். ஜெயலலிதாவின் அரசியலுக்கெதிராக போராட வலுவான பிம்பம் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் யாரும் இல்லாத நிலையில், கனிமொழியைக்கொண்டு அந்த வெற்றிடத்தை நிரப்பிவிடமுடியுமா என்று மீடியா, பத்திரிகைகள், தி.மு.கவினர் என்று பலரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். நீதிமன்ற விசாரணைக்கு செல்லவேண்டிய கட்டாயம் இல்லாமல், எந்தெந்த திகதிகளில் அவர் சென்னையில் இருப்பார் என்று பட்டியலையும் தி.மு.க தலைமை நிலையம் வெளியிட்டிருக்கிறது. கனிமொழி சிறைக்குச் சென்றது தந்தையைப் போல மொழிப்போராட்டத்தில் அல்ல. மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு நீதிகேட்டு நடத்திய போராட்டத்திலும் அல்ல. குறைந்த பட்சம் அண்ணன் ஸடாலினைப் போல அடக்குமுறை மிசா சட்டத்தின் கீழ் அடைக்கப்படவும் இல்லை.

ஊழலில் ஈடுபட்டு செல்வாக்கை முறைகேடாகப் பயன்படுத்தி, அரசுக்கு பல கோடி நஷ்டம் ஏற்படுத்தி தான் சில கோடி லாபமடைவதற்காக சதி செய்து நம்பிக்கை துரோகத்தில் ஈடுபட்டதாக சி.பி.ஐ அவர் மீது குற்றம் சுமத்தியிருக்கும் ஸ்பெக்ட்ரம் வழக்கில தான் அவர் கைதாகி சிறையிலிருந்து பிணையில் வெளியே இப்போது வருகிறார். வழக்கு விசாரணை முடிந்து நிரபராதி என்றோ குறைந்தபட்சம் அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்றோ விடுதலை செய்யப்பட்டு சிறையிலிருந்து வெளிவரும்போது கட்சியினர் மாபெரும் வரவேற்பு அளித்தால் அதன் நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

கனிமொழிக்கு பிணையில் வருவதற்கே வரவேற்பு என்பது தி.மு.கவில் அதிகாரப் போட்டி அடுத்த சுற்று ஆரம்பம் என்பதன் அடையாளம் தான்.

கலைஞர் கருணாநிதியின் குடும்பங்களுக்குள் நடக்கும் இந்த அதிகாரப் போட்டிதான் இலக்கியவாதி கனிமொழியை அரசியல்வாதி கனிமொழியாக்கி குற்றவாளி அவதாரத்தில் சிறையில் தள்ளியது. இந்திய அரசியலில் கலைஞர் கருணாநிதியைத் தவிர வேறு எந்தத் தலைவரின் குடும்பப் பிரச்சினைகளும் அரசியல் பிரச்சினைகளாக மாறிய சரித்திரமும் இல்லை. இதனால் இந்திய அரசியல் வரலாற்றிலேயே இதுவரை இப்படி நடந்ததில்லை என்ற விசித்திர பெருமைகள் கனி மொழிக்குக் கிடைக்கக் காரணம் குடும்ப சிககல்கள். எந்தக் கட்சிப் பதவியிலும் ஆட்சிப் பதவியிலும் இல்லாத ஒருவர், அதுவும் அரசியலில் ஐம்பதாண்டுகள் அனுபவம் மிக்க ஒரு கட்சித்தலைவரின் மகள், பிரமமாண்டமான ஊழல் குற்றச்சாட்டில் கைதாகி அவரது கட்சியின் கூட்டணி ஆட்சி நடத்தும்போதே சிறைகக்கு அனுப்பப்படும் "பெருமை" வேறு யாருக்கும் கிட்டியதில்லை.

கனிமொழி பிறந்த சமயத்திலிருந்தே அவருடைய பிரச்சினைகளும் தொடங்குகின்றன. சில வருடங்கள் முன்பு கலைஞர் கருணாநிதி தன் கோபாலபுரம் வீட்டை தன காலத்துக்குப் பிறகு, தன் மனைவி தயாளு அம்மாள் காலத்துக்குப் பிறகு பொது மருத்துவமனையாக்குவதற்கு நன்கொடையாக அளிப்பதாக அறிவித்தார். அப்போது இந்த முடிவுக்கு தன் மகன்கள் மு.க.அழகிரி, மு.க.ஸ்டாலின், தமிழரசு ஆகியோரும் சம்மதம் தெரிவித்திருப்பதாக சொன்னார். எதற்கு அவர்கள் சம்மதம்? வீட்டை அவர்களுக்கு ஏற்கனவே அவர் கொடுத்துவிட்டார். அதனால் தான். எப்போது கொடுத்தார்? 1968 இல்! அப்போது கலைஞருக்கு வயது 44 தான். கோபாலபுரம் வீடு தான் அவரது முதல் அசையா சொத்து. அதை ஏன் ஒருவர் தன் 44 ஆம் வயதிலேயே மகன்களுக்கு மேட் ஓவர் செய்ய வேண்டும்? காரணம் இன்னொரு துணைவியான ராஜாத்தி அம்மாளின் மூலம் கனிமொழி அந்த ஆண்டு பிறந்ததுதான் என்று அனுமானிக்கலாம்.

கணவருடன் தனக்குள்ள இடத்தைப் பங்குபோட இன்னொரு பெண் வந்துவிடும்போது எந்த மனைவியும் உடனடியாக தன் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து அச்சப்படுவதும் அதற்காக நடவடிக்கைகள் எடுப்பதும் இயல்பானது. கனிமொழிக்குள் இருக்கும் இலககியவாதியை கவிஞரை, பகுத்தறி வாளரை சந்திக்க அவரது படைப்புகள் உதவும். அவருக்குள் இருக்கும் அரசியல்வாதியை சங்கமம் விழா ஏற்பாடுகளில் சந்திக்கலாம். நீராராடியாவுடன் டேப்பில் பதிவாகியிருக்கும் அவருடைய உரையாடல்களில் தரிசிக்கலாம்.

நீராராடியா உரையாடல்கள் ஒரு பதற்றமும், சூழ்ச்சியும் சுயநலமும் அவசரமும் நிரம்பிய அரசியல்வாதியைக் காட்டுகின்றன. குடும்ப சிக்கல்களை சமாளிக்கவேண்டிய கவலைகள் அதில் பிரதிபலிக்கின்றன. கவிதைகளில் தெரியும் நபர் அதற்கு நேர்மாறானவர். சமூகம் சார்ந்த சிந்தனையும், இன்றைய கசடுகள் நீங்கிய ஒரு நாளை பற்றிய கனவும் ஏகமும் நிறைந்த மனிதர் அதில் வெளிப்படுகிறார். இரண்டும் கனிமொழி தான் என்பதுதான் நமக்கு சிக்கல்.

எல்லா மகாத்மாக்களுக்கும் ஒரு கடந்த காலம் உண்டு. எல்லா பாவிகளுக்கும் ஒரு எதிர்காலமும் உண்டு என்பார்கள். கனிமொழி இன்னமும் மகாத்மாவும் அல்ல. பாவியும் அல்ல. முரண்பாடுகளும், ஆசைகளும், திறமையும் உடைய இன்னொரு சமூக மனிதர்.

ஆறு மாத சிறைவாசம் ஒருவருக்கு தனக்குள்ளேயே தன்னைத் தேடிப் பார்ப்பதற்கு நிச்சயம் உதவக்கூடியதுதான்.

- ஞாநி கட்டுரையிலிருந்து...

பிராம் அபிராகாம் ஸ்டாக்கர் என்ற அயர்லாந்து எழுத்தாளரின் தனித்துவமான கண்டுபிடிப்பு "ட்ராகுலா". ஸ்டாக்கர் பல நாவல்கள் எழுதியிருந்தாலும், "ட்ராகுலா" நாவலை அவர் 1897 ஆம் ஆண்டு வெளியிட்ட பிறகுதான் உலகம் முழுக்க ஸ்டாக்கர் புகழ் பரவத் தொடங்குகிறது. அப்போது அவருக்கு 50 வயது. பிராம் ஸ்டாக்கர், அயர்லாந்திலுள்ள டுப்லீன் நகரில் 1847 ஆம் ஆண்டு பிறந்தவர். சிறுவயதிலிருந்த நரம்புக் கோளாறு நோய் காரணமாக, அவரது பால்ய காலத்தின் பெரும்பகுதியும் படுக்கையிலேயே கழிந்தது. இருட்டும் தனிமையும் பயமும் அந்நாட்களில் அவரை அலைக்கழித்தன. அக்காலகட்டத்தில் அவருக்கு துணையாக நின்ற ஒரே ஆறுதல், அந்த அறையில் உயரத்தில் இருந்த ஒற்றை சன்னலும் அதன் நிழல் அசைவுகளைக் கொண்டு அவர் உருவாக்கிக் கொண்ட கற்பனை உலகமும்தான்.

வேலையாட்கள் அவருக்காகச்



# ட்ராகுலா

சொன்ன நாட்டுப்புறக் கதைகள் அவரது கற்பனைக்கு வளம் சேர்த்தன. சதா அறைக்குள்ளேயே முடங்கி கிடப்பதைப் பற்றிச் சொல்லும் போது, "எந்நேரமும் படுக்கையில் கிடப்பது கல்லறைக் குள் சுருண்டு கிடப்பது போலிருக்கும். இரவிலோ தூக்கம் வராது. ஆவியாகவோ, காற்றாகவோ மாறி எங்கேனும் சஞ்சரிக்க முடியாதா என்று மனம் ஏங்கும்" என்கிறார் ஸ்டாக்கர். இந்த ஏக்கத்தின் வெளிப்பாடுதான் "ட்ராகுலா" நாவல்.

எட்டு ஆண்டுகள் அமானுஷ்ய விஷயங்கள் குறித்து ஆய்வு செய்து இந்நாவலை எழுதியுள்ளார் ஸ்டாக்கர். டிரான்ஸ்சில்வேனியாவின் மொழியில் ட்ராகுலா என்றால் சாத்தான் என்று பொருள். இந்நாவல் வெளியாகி ஒரு நூற்றாண்டும் பதிமூன்று வருடங்களும் கடந்துவிட்டன. இருப்பினும் ட்ராகுலா உருவாக்கிய பயம் தேசம், மொழி, இனம் எல்லாவற்றையும் கடந்து இன்றும் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

படிக்கும்போதே பயமும் பீதியும் விறுவிறுப்பும் தொற்றிக் கொள்ளும் ஒரு மொழிநடை. "ட்ராகுலா" நாவல் வெளியான பிறகு, நூற்றுக்கணக்கான பேய்க்கதைகளும் பேய் சினிமாக்களும் அதையொட்டி உருவானது. இன்றுவரைக்கும் அதன் திகில் தொடர்கிறது. இதுவரை 300 இற்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளது. 29 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வெவ்வேறு மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களாக எடுக்கப்பட்டு, வெற்றிபெற்றிருக்கின்றன.

உண்மையில் ட்ராகுலா யார்? ஸ்டாக்கருக்கு மட்டுமே தெரிந்த இந்த ரகசியத்தைக் கண்டறியும் பயணத்தில் பல ஆய்வாளர்கள், இலக்கிய விமர்சகர்கள் ஈடுபட்டுள்ளார்கள். எழுத்தாளர் ஒஸ்கார் வைல்டின் காதலியான பிளாரென்ஸைத்தான் ஸ்டாக்கர் திருமணம் கொண்டார். எனவே, ஸ்டாக்கருக்கு எப்போதும் ஒஸ்கார் வைல்டோடு சிறிய பூசல் ஒன்று உண்டு. வைல்ட் தன் மனைவியை தன்னிடமிருந்து எப்போதும் அபகரிக்கலாம் என்ற எண்ணம் பிராம் ஸ்டாக்கரை தொடர்ந்து துரத்தி வந்திருக்கிறது. அதுதான் நாவலிலும் வெளிப்பட்டுள்ளது என பல ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

சிலர் வேறுவிதமாகச் சொல்லியுள்ளார்கள். "ட்ராகுலா, உண்மையிலேயே டிரான்ஸில்வேனியாவை ஆண்ட ஒரு அரசன் என்றும், அவனைப் பற்றிய பலநூறு நாட்டுப்புறக் கதைகளையும் நம்பிக்கைகளையும்தான் ஸ்டாக்கர் இந்நாவலாக எழுதியுள்ளார்" என விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். பதினான்காம் நூற்றாண்டில் டிரான்ஸ்சில்வேனியாவில் வாழ்ந்த வாலாசிய அரசனான மூன்றாம் வெல்ட், ட்ராகுலா என்றே அழைக்கப்படுகிறான். ஸ்டாக்கரின் ட்ராகுலாவைப் போலவே அவனும் மிதமிஞ்சிய இரத்தவெறி பிடித்தவன். போரில் கைப்பற்றிய பகுதியைச் சேர்ந்த மக்களை வெட்டவெளியில் வைத்து கழுவேற்றும்போது, அதன் அருகில் அலங்காரமான மேடை அமைத்து உணவை ரசித்து ருசித்து உண்பானாம். வரலாற்றில் நூற்றிற்கும் மேற்பட்ட அரசர்களும் அரசிகளும் வெல்ட்போல ட்ராகுலாக்களாக செயறபட்டிருக்கிறார்கள். "ட்ராகுலா ஒருபோதும் அழிவதில்லை. அவன் நம் மனங்களுக்குள் ஒளிந்திருக்கிறான். நாம் தான் அவனை கண்டுகொள்ளவேண்டும் அழிக்க வேண்டும்" என்கிறார் பிராம் ஸ்டாக்கர்.

- ராஜகோபால

# நவிண்டில் கலைமதி சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்

(நெல்லியடி)

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கால்பந்துப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சிக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட இக் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நவிண்டில் கலைமதி அணியும் சக்கோட்டை சென் சேவியர் அணியும் மோதின.

ஆட்டம் தொடங்கி நான்காவது நிமிடத்தில் கலைமதி அணி வீரர் ஜெயகாந்தன் தமது அணிக்காக சிறப்பானதொரு கோலைப் போட்டதுடன் அணியை முன்னிலைப்படுத்தினார். இதன் மூலம் முற்பாதி ஆட்டத்தில் கலைமதி அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி இரு அணிகளும் மேலதிக கோல்களைப் போட முற்பட்டபோதும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. போட்டி நிறைவடைய மூன்று நிமிடங்கள் இருந்த வேளை சென் சேவியர் அணி வீரர்களான அன்ரன், அமலதாஸ், டேமியன் ஆகியோர் போட்டியின் விதி முறைகளை மீறி ஆடியதால் போட்டி நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த சென் சேவியர் ஆதரவாளர்கள் நடுவரைத் தாக்க முற்பட்டனர். இதனிடையே ஏனைய ரசிகர்கள் சென்சேவியர் ஆதரவாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இக் கைகலப்பை பொலிஸாரும், படையினரும் கட்டுப்படுத்தினர். இதில் பலர் காயமடைந்தனர்.

இதன் காரணமாக போட்டி நிறுத்தப்பட்டு போட்டி ஏற்பாட்டாளர்களால் கலைமதி அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக கலைமதி அணி வீரர் விஜிதரனும், சிறந்த கோல்காப்பாளராக சந்துருவும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டியின் பிரதம நடுவராக எஸ். அனுகாந்தன் கடமையாற்றினார். (12)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இன்றைய தினம் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் அங்கத்தவர்கள்; நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் ரமணன கேட்டுள்ளார். (93)

## கூடைப்பந்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் மாலை 6.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இப்போட்டியில் பங்குபற்றும் அணிகள் குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறந்த முறையில் நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (93)

## 2 ஆண்டுகளின் பின் மீண்டும் சம்பியன்



(லாஸ்ஏஞ்சல்ஸ்)

சர்வதேச கோல்ப் போட்டிகளில் பங்கேற்ற முன்னணி வீரரான டைகர் வூட்ஸ் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். 2009 ஆம்ஆண்டு தனது சொந்த குடும்ப விவகாரம் மற்றும் பாலியல் புகாரில் சிக்கிய டைகர் வூட்ஸ் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டைகர் வூட்ஸ் கடைசியாக கடந்த 2009ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி அவுஸ்ரேலியாவில் நடந்த மாஸ்டர்ஸ் கோல்ப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றார். அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸின் ஷெர்வுட் கன்ட்ரி கிளப்பில் உள்ள தவுசன்ஸ்ஒக்ஸ் நகரில் உலக சம்பியன்ஸ் ஷிப் கோல்ப் போட்டிகள் நடந்தன. ஜாக்ஜான்சன் என்பவரை 18 [illegible]வது சுற்றில் வீழ்த்தி டைகர் வூட்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

# அச்ரேக்கரிடம் வாங்கிய அடியே இன்றைய வெற்றிக்குக் காரணம்

(மும்பை)

பாடசாலைக் காலத்தில் எனது பயிற்சியாளர் அச்ரேக்கர் அவர்களிடம் நான் வாங்கிய அடியே இன்றைய வெற்றிக்கு அடித்தளம் என்று நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் அச்ரேக்கரின் 79ஆவது பிறந்தநாள் விழா இந்தியாவின் மும்பை கிரிக்கட் சங்கத்தில் நடந்தது. .இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது சச்சின் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலையில் படித்த போது மும்பை மைதானத்தில் நடந்த இறுதி ஆட்டத்திற்கு எங்கள் பாடசாலை தகுதி பெற்றது. அன்று நானும் எனது நண்பனும் அச்ரேக்கர் சார் அளித்த பயிற்சியில் பங்கேற்காமல் புறப்பட்டோம்.

எங்களை அச்ரேக்கர் சார் பார்த்து விட்டார். அவர் எங்களைப் பாராட்டுவார் என நினைத்தேன். ஆனால் கோபத்தோடு வந்த அவர் எனது கன்னத்தில் அவரது வழக்கமான அறையை ஓங்கி அறைந்து விட்டார். எனது கையில் வைத்திருந்த பொக்ஸ் உருண்டு ஓடியது. அதை சிரமப்பட்டு நான் பிடித்தேன்.

அப்போது அச்ரேக்கர் சார் என்னிடம் உன்னுடைய ஆட்டத்தை நீ தினமும்



மேம்படுத்தினால் ஒருநாள் மக்கள் உனக்காக கை தட்டுவார்கள் என்று தெரிவித்தார்.

இதை நான் பலமுறை சிந்தித்துப் பார்த்தேன். இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் என் வாழ்க்கை முழுவதுமாக மாறி விட்டது. என்னை ஆட்டமிழக்கச் செய்பவர்களுக்கு அச்ரேக்கர் நாணயம் வழங்குவது உண்டு.

ஆனால் அது முடியாததால் அத்தனை நாணயமும் எனக்கு வழங்கப்படும். அதை நான் இன்றும் பத்திரமாக வைத்திருக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை வெற்றி

தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை தனது முதல் ஆட்டத்தில் இலகுவெற்றியீட்டியது.


“ஏ” பிரிவுக்காக பூட்டான் அணியை எதிர்கொண்ட இலங்கை அணி 3-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

டில்லி, ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இலங்கை அணி ஆரம்பம் தொட்டு எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தது. இந்நிலை போட்டியின் 29ஆவது நிமிடத்தில் சதுர குணரத்ன பரிமாற்றிய பந்தை மொஹம்மட் செயின் கோலாக்கி இலங்கையை முன்னிலை பெறச் செய்தார்.

தொடர்ந்து அபாரமாகச் செயற்பட்ட இலங்கை அணி நிபுன தேவிந்த பண்டாரவைக் கொண்டு வெற்றியை உறுதி செய்தது. பண்டார போட்டியின் 35 மற்றும் 65 ஆவது நிமிடங்களில் தொடர்ந்து கோல்களை போட்டார். இதன் மூலம் இலங்கை 3-0 என முன்னிலை பெற்றது.

மறுபுறத்தில் பூட்டான் தமது கோல் எல்லையை காப்பதிலேயே அதிக நேரத்தை வீணாக்கியது. இதனால் அதற்கு பதில் கோல் திருப்பும் வாய்ப்புகள் ஏற்படவில்லை. இறுதியில் இலங்கை அணி இலகு வெற்றியீட்டி தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரை நம்பிக்கையுடன் ஆரம்பித்தது.

# பெல்ஜியம் சம்பியன்



(ஜொகனஸ்பேர்க்)

உலக சம்பியன்ஸ் சலஞ்ச் ஹொக்கி போட்டித் தொடரில் பெல்ஜியம் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சம்பியன்ஸ் சலஞ்ச் ஹொக்கிப் போட்டித் தொடர் தென்னாபிரிக்காவின் ஜொகனஸ்பேர்க்கில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் இந்திய அணியும் பெல்ஜியம் அணியும் மோதின. இதில் பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி கண்ட பெல்ஜியம் அணி 3-4 என்ற கோல் கணக்கில் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதில் ஒரு கட்டத்தில் இந்திய அணி 3-1 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலை பெற்றிருந்தது. அதன் பின்னர் 3-3 என்று சமனுக்கு கொண்டு வந்த பெல்ஜியம் கடைசி நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்து வெற்றியை தன்வசப்படுத்தி விட்டது.

# இலங்கை வீரர்களின் சம்பள பாக்கி விரைவில் வழங்கப்படவேண்டும்!

## தென்னாபிரிக்க கப்டன்களான ஸ்மித், டி வில்லியர்ஸ்

(டர்பன்)


இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு 8 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாதுள்ளது. இது கண்டனத்திற்குரியது. எதிர்வரும் எமது அணியுடனான தொடர்களுக்கு முன்னர் சம்பள பாக்கியை வழங்க கிரிக்கெட் சபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தென்னாபிரிக்க அணிக் கப்டன்களான ஸ்மித், டி வில்லியர்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் இலங்கை அணி விரைவில் 3 டெஸ்ட் போட்டிகளிலும் 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இந்நிலையில் தென்னாபிரிக்க டெஸ்ட் அணித் தலைவர் கிறேம் ஸ்மித், ஒருநாள் போட்டிகளுக்கான அணித் தலைவர் டி வில்லியர்ஸ் ஆகியோர் இலங்கை வீரர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர்.

இது குறித்து தென்னாபிரிக்க டெஸ்ட் அணித் தலைவர் ஸ்மித் குறிப்பிடுகையில், டில்சான் மற்றும் இலங்கையிலுள்ள எமது ஏனைய சக தொழில்சார் கிரிக்கெட் வீரர்களுக்கு இவ்விடயத்தில் எமது ஆதரவை தெரிவிக்க விரும்புகிறோம். கடந்த 8 மாதங்களாக அவர்களின் சம்பளங்கள் வழங்கப் படாதுள்ள நிலையில் அவர்கள் இங்கு கடினமான டெஸ்ட் மற்றும் ஒருநாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவது சிறந்ததல்ல எனத் தெரிவித்தார்.

ஒரு நாள் அணித் தலைவர் டி வில்லியர்ஸ் குறிப்பிடுகையில், கிரிக்கெட்டில் இந்த தொழில்சார் யுகம் நிலவும்போது இப்படியான விடயங்கள் நடைபெறக்கூடாது. இவ்வளவுக்கும் மத்தியில் மார்ச் மாதத்திலிருந்து தொடர்ந்து நாட்டுக்காக விளையாடிவரும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இப்பிரச்சினை விரைவில் தீரும் என நாம் நம்புகிறோம்




எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை அணியின் தென்னாபிரிக்க சுற்றுலா ஆரம்பமாகும் முன்னர் இவ்விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என தான் நம்புவதாக சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொனி ஐரிஸ் கூறியுள்ளார். இலங்கை அணி வீரர்களின் சம்பள பாக்கியில் 40 சதவீதம் விரைவில் வழங்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை முற்றுகின்றது


(மதுரை)

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையை கேரளாவில் அரசு மற்றும் அரசியல் கட்சிகள் பூதாகாரமாக்கி, மக்களிடையே பீதியை ஏற்படுத்தி வருகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனால் தமிழக எல்லைப் பகுதியிலும் பெரியாறு அணை பகுதியிலும் வன்முறை ஏற்படும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

பெரியாறு அணை பிரச்சினையில் பதற்றத்தை தணிக்க தமிழகம் மற்றும் கேரள உயர் அதிகாரிகளின் கூட்டத்தை மத்திய அரசு நடத்த ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், இந்தப் பேச்சு வார்த்தையால் எந்தப் பயனும் ஏற்படாது என்பதால் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க தமிழக அரசு மறுத்துவிட்டது.


இந்தச் சூழ்நிலையில் தமிழக எல்லையில் கேரளத்தைச் சேர்ந்த கட்சிகள் மற்றும் உள்ளூர் அமைப்புகள் வன்முறை மற்றும் பதற்றத்தை ஏற்படுத்தும் செயல்களை அரங்கேற்றியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

பெரியாறு அணையில் உள்ள பேபி அணைப் பகுதிக்குச் சென்ற பா.ஜ.க. கட்சியினர் 18 பேர் கைது செய்யப்பட்டனர். கேரள எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. கேரள அரசியல் கட்சியினரின் அத்துமீறும் செயல்களால் அணைப் பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.



பெரியாறு அணையில் கேரள பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது கேரள அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு பெரியாறு அணையை உடைப்போம் என அத்துமீறி வருகின்றன.

# நான் எதையும் செய்யவில்லை




(புதுடில்லி)

கர்நாடக முதல்வராக இருந்த போது, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் சுரங்கத் தொழில் நடத்துவதற்கு, யாருக்கும் உரிமம் கொடுக்கவில்லை என வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா கூறியுள்ளார்.

தற்போதைய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, 1999-2004 இல், கர்நாடக முதல்வராக இருந்தார். அப்போது, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில், சட்டவிரோத சுரங்கத் தொழில் நடத்துவதற்கு உரிமம் அளித்ததாக, அவர் மீது சமீபத்தில் புகார் கூறப்பட்டது. வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறையின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், சுரங்கத் தொழில் நடத்துவதற்கான உரிமத்தை, அவர் அளித்ததாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, கிருஷ்ணா மீதான புகார் குறித்து விசாரணை நடத்துவதற்கு, லோக் ஆயுக்தா நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், அமைச்சர் கிருஷ்ணா, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நான் முதல்வராக இருக்கும் போது, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் சட்டவிரோத சுரங்கத் தொழில் நடத்துவதற்கு யாருக்கும் உரிமம் வழங்கவில்லை. மாநில அமைச்சரவையின் ஒப்புதலின்படி தான், சுரங்கத் தொழிலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. எந்த ஒரு நபருக்கும் சாதகமாகவும், முடிவும் எடுக்கப்படவில்லை. மாநிலத்தின் நலன் கருதி தான், கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டன. இதற்கு ஆதரமாக அனைத்து ஆவணங்களையும் தர தயாராக உள்ளேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# முடங்கிய நாடாளுமன்ற கூட்டத்தொடர்
## இனி சுமூகமாக நடக்குமாம்

(புதுடில்லி)

நாடாளுமன்றத்தின் தொடர்ச்சியான முடக்கத்திற்கு காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள்தான், காரணம் என, பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அருண ஜெய்ட்லி குற்றம் சுமத்தியுள்ளார். காங்கிரஸ் அரசு, வலுவற்ற லோக்பால் மசோதாவைக் கொண்டுவர முயற்சி செய்வதாகக் குற்றம் சாட்டிய அவர், இதை பாரதிய ஜனதா ஒருபோதும் அனுமதிக்காது என்று தெரிவித்தார். இதேவேளை எதிர்க்கட்சிகளின் கடுமையான அமளிகளால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர இனி சுமூகமாகச் செயற்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் சில்லறை வர்த்தகததில் அன்னிய முதலீடு, தெலுங்கானா பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை போன்ற காரணங்களுக்காக எதிர்க்கட்சிகள் மத்திய அரசின் மீது கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்ததையடுத்து நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் 4 நாட்கள் இடைவெளிக்குப்பிறகு நாடாளுமன்ற கூட்டத் தொடர் நாளை மறுதினம் முதல் மீண்டும் தொடங்கவுள்ளது.

## ஆடுகள் பலி

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு விவசாயப் பணிகளோடு ஆடு வளர்க்கும் தொழிலும் இடம் பெறுகின்றது. இங்கு ஆடுகளுக்கு கோமாரி நோய் தாக்கி வருகிறது. இதனால் ஆடுகள் வாயில் புண் ஏற்பட்டு இரை தின்ன முடியவில்லை. இந்த கோமாரி நோய் காரணமாக இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்து விட்டன.

# தலைவருக்காக மாவோயிஸ்ட்கள் தாக்குதல்

(ராஞ்சி )

மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி கொலையை கண்டித்து மாவோயிஸ்ட்கள் நேற்றுமுன்தினம் நடத்திய போராட்டத்தில் ஜார்கண்ட் மாநிலத்தில் தண்டவாளம் தகர்க்கப்பட்டது, பீகாரில் தொலைபேசிக் கோபுரம் எரிக்கப்பட்டது. பல ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டதால் பயணிகள் சிரமப்பட்டனர். மாவோயிஸ்ட் அமைப்பில் முக்கிய உறுப்பினராக இருந்த கிஷன்ஜி, மேற்கு வங்கம் மேற்கு மிட்னாபூர் காட்டுப் பகுதியில் கடந்த வாரம் நடந்த தேடுதல் வேட்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு எதிராக நக்சல் ஆதிக்கம் உள்ள பகுதிகளில் கடந்த 2 நாள் போராட்டத்துக்கு மாவோயிஸ்ட்கள் அழைப்பு விடுத்தனர்.

ஜார்கண்ட் மாநிலம் லதேகர் மாவட்டத்தில் கடந்த வெள்ளி இரவே மாவோயிஸ்ட்கள் தாக்குதலைத் தொடங்கினர். சுயேச்சை எம்.பி. இந்தர்சிங் நம்தாரியை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அவரது காரின் பின்னால் சென்ற பொலிஸ்காரரர்கள் உட்பட 11 பேர் பலியாயினர். இச்சம்பவம் நடந்த சில மணி நேரத்தில் மற்றொரு குழுவினர் லதேகர் மாவட்டத்தில் உள்ள ஹேஹேகரா, சிப்பா தோர் ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாளத்தை குண்டு வைத்துத் தகர்த்தனர். இதையடுத்து ஜார்கண்ட் மற்றும் பீகாரில் பல ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளானர்கள்.

# இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தம் தொடர்கிறது



(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை மீட்டுத்தர வலியுறுத்தி, மீனவர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டம் 7ஆவது நாளை எட்டியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஐந்து பேரும், விடுதலை செய்யப்படுவார்கள் என இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையில், இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதலால் படகுகளை இயக்க முடியாத சூழலில் இருந்து வரும் மீனவர்கள், தங்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் பொய்யான வழக்குகள் பதிவு செய்து, சிறையில் அடைப்பதாக கூறுகின்றனர்.

நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்களும், மீன்பிடி சார்புத் தொழிலாளர்கள் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழிலுக்குச் செல்லவில்லை. மீன்பிடித்தொழில் முடங்கியுள்ளதால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல மீனவர்கள் வேலை தேடி வெளிமாநிலங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்று பாபர் மசூதி இடிப்பு தினம்

(சென்னை)

பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளான டிசம்பர் 6ஆம் திகதியை முன்னிட்டு, இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சென்னையில் மட்டும் 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுபட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பிருந்தே சென்னையில் பாதுகாப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இதில், 256இற்கும் மேற்பட்டவர்களிடம் சந்தேகத்தின் பேரில் விசாரணை நடந்து வருகிறது. கடந்த வெள்ளியன்று ஆயுதங்களுடன் பிடிபட்ட 2 பேரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

முக்கிய ரயில் நிலையங்கள், ரயில் பாதைகள், பெரிய, சிறிய பாலங்கள், ரயில்வே அலுவலகங்கள், பணிமனைகளில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கண்காணிப்பு கேமரா மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ரயில்வே பொலிஸார், ரயில்வே பாதுகாப்புப் படையினர் மட்டுமின்றி 3 பட்டாலியன் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், உள்ளூர் பொலிஸார் தமிழ்நாடு முழுவதும் உள்ள ரயில்நிலையங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வெடிகுண்டு அகற்றும் படையினர், மோப்ப நாய் படையினரும் தயார் நிலையில் உள்ளதாகத் தெரியவருகின்றது

# மாநில முதல்வர் முன்னிலையில் விவசாயி தற்கொலை முயற்சி



இந்திய மகாராஷ்ட்ரா மாநில முதல்வர் பிருத்விராஜ் சவான் முன்னிலையில் விவசாயி ஒருவர் தற்கொலை செய்ய முயனறுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அம்மாநில முதல்வர் பிருத்விராஜ் சவான் கலந்து கொண்டு பேசினார்.

முதல்வரின் கவனத்தை ஈர்ப்பதற்காக அருண் சபானே(45) என்ற விவசாயி பூச்சி மருந்தை குடித்து தற்கொலை செய்ய முயன்றார். பொலிஸார் அந்த விவசாயியை உடனடியாக தடுத்து வைத்திய சாலையில் அனுமதித்தனர். இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உலகச் செய்திகள்

# இங்கிலாந்து தூதரகம் அருகில் குண்டுவெடிப்பு

(பஹ்ரைன்)

பஹ்ரைன் நாட்டின் தலைநகர் மனாமாவிலுள்ள இங்கிலாந்து தூதரகம் அருகே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. ராஸ் ரம்மான் பகுதியில் உள்ள இங்கிலாந்து நாட்டுத் தூதரகம் அருகே நிறுத்தப்பட்டிருந்த பேருந்து ஒன்றின் முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த குண்டு வெடித்ததாகத் தெரிவித்த அந்நாட்டு உள்துறை அமைச்சகம், உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதா என்பது குறித்துத் தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை.இச்சம்பவம் குறித்துத் தெரிவித்த இங்கிலாந்து தூதரக செய்தித் தொடர்பாளர் ஒருவர், குண்டு வெடிப்பு தங்கள் தூதரகத்தை குறிவைத்து நடத்தப்பட்டதா என்பது தெரியவில்லை என்றார்.

மேலும் அமெரிக்காவின் இந்த அத்துமீறலுக்கு ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது. இதே போன்று கடந்த ஜூலை மாதம் ஈரானின் கூவாம் நகரில் உள்ள அணுதிட்ட நிலைகளை வேவு பார்த்த அமெரிக்க உளவு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ்

(இஸ்லாமாபாத்)

கெடு முடிவடைவதை தொடர்ந்து பாகிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் ஆக தொடங்கியுள்ளன. ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தான் இராணுவ முகாம் மீது அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகள் குண்டு வீசி தாக்கின. அதில் 24 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் பலியானார்கள்.

அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகளுக்கு லொரிகள் மூலம கொண்டு செல்லப்படும் உணவு பொருட்கள் மற்றும் எரி பொருட்களை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தியது. பாகிஸ்தான் மலைப் பகுதியில் பதுங்கியுள்ள தீவிரவாதிகள் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணை வீசி அழிக்கப்பட்டு வருகிறார்கள்.

அதற்காக பாகிஸ்தான் பலுசிஸ்தானில் உள்ள 'ஹாம்சி' விமானப்படை தளத்தை அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. அங்கு அமெரிக்க படைகள் தங்கியுள்ளனர். பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அங்கிருந்து வருகிற 11ஆம் திகதிக்குள் அமெரிக்க இராணுவம் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது. இது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாகிஸ்தானுடன் சமரசம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது பயனளிக்கவில்லை.



இராணுவம் வெளியேற பாகிஸ்தான் விதித்த கெடுவும் நெருங்குகிறது. எனவே அமெரிக்க இராணுவம் 'ஷாப்சி' விமானப் படை தளத்தில் இருந்து வாபஸ் பெறும் பணி தொடங்கியது. நேற்று முன்தினம் முதல் அதற்கான பணி தொடங்கியது. இதைத தொடர்ந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க விமானங்கள் புறப்பட்டு செல்கின்றன. எனவே விமானப்படை தளத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதை சுற்றி தங்கியிருக்கும் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 'ஷாப்சி' விமான தளத்துக்கு செல்லும் வீதிகளும் அடைக்கப்பட்டன.

# புகுஷிமா அணு உலையிலிருந்து 45 டொன் கதிரியக்க நீர் கசிவு



(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள "புகுஷிமா டாய்ச்சி" என்று அழைக்கப்படும் அணு சக்தி நிலையத்தில் சுமார் 45 டொன் கதிரியக்க நீர் கசிந்து, பசிபிக் கடலில் கலந்தது.

கடந்த 9 மாதங்களுக்கு முன்பு, கடுமையான் நிலநடுக்கமும் மற்றும் சுனாமியும் ஜப்பானை சூறையாடிச் சென்றது. இதில் ஜப்பானின் அணு சக்தி நிலையமும் ஒன்று. இந்த பேராபத்திற்கு பின்பு, சில நாட்களுக்கு முன்பு தான், மீண்டும் அணு சக்தி நிலைய இயங்க ஆரம்பித்தது.

இதனையடுத்து, அந்த அணு சக்தி நிலையத்தின் சுத்திகரிப்பு பகுதியில், தூய்மைப் படுத்துவதற்காக வைத்திருந்த சுமார் 45 டொன் எடையுள்ள கதிரியக்க நீர் கசிந்து பசிபிக் கடலில் கலந்துள்ளது. இதனை கண்டுபிடித்து, அனைத்து இயந்திரங்களின் இயக்கமும நிறுத்தப்பட்டாக அங்கு வேலை செய்பவர்கள் கூறியதாக தெரிகிறது.

# ரஷ்யாவில் தேர்தல் ஆளும் கட்சி வெற்றி?

ரஷ்யாவில் நேற்று முன்தினம் நடந்து முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலில், வாக்கு எண்ணிக்கை தற்போது நடந்து வருகிறது. இதில் ஆளும் ஐக்கிய ரஷ்யா கட்சி, அறுதி பெருபான்மையை இழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 17 சதவிகித வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய ரஷ்யா கட்சி, அதில் சுமார் 46 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளதாக, ரஷ்யாவின் தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளர்.

கம்யூனிஸ்ட் கட்சி 21 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளது. 450 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில், தற்போது ஆளும் ஐக்கிய ரஷ்யா கட்சிக்கு 315 உறுப்பினர்கள் உள்ளனர். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில், இந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பிரதமராக இருக்கும் விளாடிமிர் புடின், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்க உளவு விமானத்தை கைப்பற்றியதாக ஈரான் அறிவிப்பு

அமெரிக்க விமானப்படையின் உளவு விமானத்தை கைப்பற்றியிருப்பதாக ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது. ஈரானின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க விமானம் கைப்பற்றப்பட்டதாகவும், தற்போது அது தங்களது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

இதுகுறித்து அரபி மொழி தொலைக்காட்சியான அல் ஆலம் கூறுகையில், ஈரானின் கிழக்கு எல்லைப் பகுதியில் இந்த விமானம் பிடிபட்டது. விமானத்தை இராணுவத்தினர் கைப்பற்றியபோது அதில் லேசான சேதம் ஏற்பட்டது. விமானம் தற்போது ஈரான் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது என்று அது தெரிவித்துள்ளது.

ஈரான் எல்லைக்குள், சட்டவிரோதமாக ஊடுருவியதால் இந்த உளவு விமானம் கைப்பற்றப்பட்டதாக ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது. பிடிக்கப்பட்டுள்ள அமெரிக்க உளவு விமானம் தாக்குதல் நடத்தும் எண்ணத்தில் வரவில்லை என்றும், அதில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் எதுவும் இல்லை என்றும் கூறப்படுகிறது.மேற்கு ஆப்கானிஸ்தான் நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது இந்த விமானம் மாயமானது. அதைத்தான் ஈரான் இராணுவம் பிடித்திருக்கலாம் என்று அமெரிக்கத் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

அந்த விமானம் கட்டுப்பாட்டுத் தளத்திலிருந்து இயக்கி வந்தவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி விட்டது. அதைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான் அது ஈரான் பிடியில் சிக்கியிருப்பதாகவும் அமெரிக்கத் தரப்புக் கூறியுள்ளது. முதலில் இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தகவல்கள் கூறின. இருப்பினும் ஈரான் இராணுவத்திற்கு நெருக்கமான பார்ஸ் செய்தி நிறுவனம் கூறுகையில், விமானத்தை ஈரான் இராணுவத்தினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இறக்கி விட்டனர். விமானத்தில் லேசான சேதமே ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

கு. அழகிரிசாமியும் கி. ரா வும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தும் படைப்பின் மன இயக்கம் என்பது வெவ்வேறானவையாக இருப்பதை அறியலாம். இவரின் மன உலகை அவரோ அவரின் மன உலகை இவரோ எழுத முடியாது. இதுதான் படைப்பு ரகசியம். படைப்பாளியின் தனித்துவம் என்பது அவனுடைய மன உலகிலேயே பதுங்கியிருக்கிறது.

**– சு. வேணுகோபால்**

ஒரே வகையான கோட்பாட்டுக் கல்வியும் ஒரே வகையான அனுபவச் சூழலும் கொண்ட இரு படைப்பாளிகள் முற்றிலும் மாறுபட்ட இரு ஆக்கங்களையே உருவாக்குவார்கள் என்ற உண்மையில் இருந்து புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இது. இலக்கியத்தில் படைப்பாளி கொள்ளும் கோட்பாட்டுத் தெளிவோ, பிரச்சினை மீதான உணர்ச்சிகர ஈடுபாடோ எல்லாம் அதன் உருவாக்கத்தில் மிகச்சிறிய பங்கையே வகிக்கின்றன. படைப்பு என்பது அப் படைப்பாளியின் மனதிறகும் அவனுடைய மொழி பிரக்ஞைக்கும் இடையே அவனை மீறி நடக்கும் ஒரு விளையாட்டு. கூறுவதற்கு மட்டுமல்ல, கூறாமல் மறைப்பதற்கும் சிறந்த படைப்புகள் எழுதப்படலாம். தான் நம்புபவற்றைத் தான் எழுத்தாளன் எழுதுவான் என்று இல்லை, முற்றிலும் நம்பாதனவற்றையும் எழுதலாம். அது ஒரு விளையாட்டு என்று கூறும போதுதான் அதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். விளையாட்டின் பயன் என்பது விளையாட்டில் உள்ள இன்பமே. விளையாட்டை ஒரு தொழிலாக, ஒரு பயணமாக எடுத்துக்கொண்டு அதன் இயக்கத்தை அர்த்தப்படுத்த முயல்பவனுக்கு ஆயாசமே விளையும். படைப்பாளி தன் படைப்பில் தன் நம்பிக்கைகளை குழந்தையைக் கொஞ்சும் தாய் போலவும் கையாளலாம் எலியைக் கொஞ்சும் பூனைபோலவும் கையாளலாம். இந்த 'எதிர்பாராத' தன்மை 'விளக்க முடியாத' தன்மையில் இருந்தே இலக்கியத்தின் சாத்தியப்பாடுகள் பிறக்கின்றன.

இலக்கியப் படைப்பாளியின் கருத்தியலுக்கு எவ்விதமான தனி மதிப்பும் இல்லை. வரலாற்றைப் பற்றியும் பெண் விடுதலை பற்றியும் காமம் பற்றியும் தல்ஸ்தோய் கொண்டிருந்த கருத்து நிலைப்பாடுக்கும் அவரது படைப்புகளின் தீராத ஆழத்திற்கும் என்ன தொடர்பு? இலக்கியம் என்பது நிலைப்பாடு அல்ல. நிலைப்பாடுகளின் விளையாட்டு அது என்று கொள்வதே பொருத்தம். ஒரு பறவையைப் புரிந்துகொள்ள மானசீகமாகவேனும் சற்றுப் பறந்தாக வேண்டும். குழந்தைகளை அறிய விளையாடியாக வேண்டும். படைப்புகள் விளையாட்டுகள். சேர்ந்து விளையாடுபவனே அவற்றுடன் உரையாட இயலும்.

**– ஜெயமோகன்**

புரிந்துகொள்ள முடியாதிருப்பது கவிதை மட்டுமா? அன்றாட வாழ்வின் அற்ப விஷயங்கள் கூடப் புரிந்துகொள்ள முடியாத அம்சங் கள் இருப்பதைப் பார்க்கிறோம். நமக்குப் பரிச்சயமில்லாத விஷயங் கள். நமக்குப் பிடிபடாத கவிஞனின் வித்தியாசமான பார்வை, அவனோட வெளியீட்டு உத்திகள் இப்படிப் பல காரணங்களினால் சில கவிதைகளை நெருங்க முடியல. நான் நினைக்கிறபடி ஒன்று எனக்குப் புரிந்தாக வேண்டும் என்றோ, எனது முயற்சி எதுவும் இல்லாமல் எனக்குக் கவிதை புரிந்தாக வேண்டும் என்றோ பிடிவாதம் செய்யாதவர்களுக்கு மட்டும் இந்த வகையில் உதவலாம். முதலில் கவிதையைப் புரிந்துகொள்ளல் என்றால் என்ன? உள்ளடக்கம் என்ன என்று தெரிந்துகொண்டால் மட்டுமே கவிதை புரிந்ததாகுமா? உள்ளடக்கம் கவிதையில் ஒரு அம்சம் மட்டும்தான். கவிஞனின் அனுபவக்கூறு, உணர்வு, த்வனி, சூசகம் எல்லாம் கவிதையின் மொத்த இயக்கத்தில் இருப்பவை. பதவுரை, பொழிப்புரை திருப்திகளில் கவிதையைச் செரிக்க முடியாது. இலக்கியம், கலை எதுவும் அர்த்தப்படுவதில்லை. விஷயம் எதுவாயினும் அது அர்த்தமாக்கப்படும்போது வேறொன்றாக நிற்கிறது. ஒன்று விஷயம், இன்னொன்று அதன் அர்த்தம். பொழிப்புரை கவிதையைப் புரிந்துகொள்ள உதவாது. கவிதையிலிருந்து நழுவிச் செல்லவே உதவும்.

புரிந்துகொள்வது என்பது மூளையின் ஆமோதிப்பைப் பெறுவதன்று. எந்த அர்த்தமும் புலப்படாமலே ஒன்றை நாம் உள்வாங்கிக் கொள்ள முடியும். இசை, நடனம், ஓவியம், சிற்பம் இவைகளை எந்த விதம் புரிந்துகொள்கிறோமோ, அந்த விதத்தில் கவிதையையும் புரிந்து கொள்ளலாம். அதாவது அனுபவப்படுத்திக் கொள்வது, தனக்குள் சலனம் எழக் காண்பது, இருக்கும் சலனங்கள் அடங்கக் காண்பது, தன்னைக் கண்டுணர்வது. இந்த ரீதியில்தான் கவிதை புரிந்து கொள்ளப்படுகிறது. நாம் கவிதையைப் படிக்கும்போது, கவிதை நம்மைப் படிக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய அடித்தல், திருத்தல் நிறைந்து, மிகமிக அந்தரங்க அழுக்குகள் மறைந்திருக்கிற பிரமைகளும் அர்த்தமின்மைகளும் உயிரோடு கிடக்கிற நம் பக்கங்களைக் கவிதைகள் படிக்கின்றன. அவற்றின் தொடல் கூச்சம் தருவது, லேசான வலி தருவது, கோபமும் திருப்தியும் தருவது. கவிதைகளை உள்வாங்கிக் கொள்வது இப்படித்தான். அதாவது கவிதையின் பொருள் கவிதையிடம் இல்லை. நம்மிடம் இருக்கு. கவிதை தரும் தூண்டலில் அது நமக்குப் புலப்படுது.

அறிவியல், தொழில்நுட்பம், தத்துவம், பொருளாதாரம் இவையெல்லாம் எந்த அளவுக்கு மக்களுக்கானவைகளாக இருக்கின்றனவோ அந்த அளவு கலை இலக்கியமும் மக்களுக்கானவையாகத்தான் இருக்கின்றன. எல்லா மக்களுக்கும் அது புரிஞ்சாகணும் என்பது எப்படி முடியும்? கவிதையையும் மக்களையும் தனித்தனியே பலவந்தம் செய்கிற ஒரு சர்வாதிகாரம் அது.

**– அபி**

# அஞ்சலி செலுத்துவதற்கு அருகதையற்றுப் போய்விட்ட மேதகு பிரபாகரன்

மாவீரர் தினம் அடிபாடுகள், விமர்சனங்கள், விவாதங்களுக்கு மத்தியில் நடந்து முடிவடைந்து விட்டது. புலம்பெயர் நாடுகளில் உள்ள மாவீரர் குடும்ப உறவினர்களைத் தவிர இலங்கையில் இன்னலுக்குள்ளாகியிருக்கும் மாவீரர் குடும்பங்களுக்கு இந்த நினைவுகூரல் எதுவித பொருளாதார விமோசனத்தையும் தந்துவிடப் போவதில்லை. தமது குடும்ப உறுப்பினரை இழந்து விட்ட சோகத்தை தவிர அவர்கள் போராட்டத்தினால் மரணித்ததன் பலன்கள் வெறுமனே பூச்சியமானதாக ஒன்றாகிவிட்டதாகிவிடும். புலம்பெயர் நாடுகளில் மாவீரர் தினம் என்பது நினைவுகூரலுக்கு அப்பால் வருமானத்தை தருகிற ஒரு விடயமாகி விட்டதால் பிளவுபட்ட புலி அமைப்புகளிடையே விமர்சனங்களுக்கு அப்பால் தாக்குதல் சம்பவங்களாக மாறியதை புலம்பெயர் மக்கள் நன்கு அறிவார்கள்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் இருந்தவரை மாவீரர்தினம் பரபரப்பானதாக இருந்தது. பாலசிங்கம் எழுதியதை பிரபாகரன் வாசித்து விட அதனை திரும்பவும் விளக்கவுரையாக பாலசிங்கம் தூஷணப் பகிடிகளுடன் எடுத்துச்சொல்ல மாவீரர் தினம் புலம்பெயர்நாடுகளில் களைகட்டி புலிகளின் ஆதரவாளர்களுக்கு குதூகலமாக இருக்கும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை நான் வைச்சிருக்கிறதா நீ வைச்சிருக்கிறதா என பாலசிங்கம் பிரபாகரனை பகிடியாக கேட்டதிலிருந்து தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் புலிகளின் பிரதிநிதிகள் தாய்லாந்து இரவு விடுதிகளுக்கு போவது வரை பாலசிங்கத்தின் மாவீரர தின விளக்க உரை அமைந்திருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. இப்போது உரை எழுதிக்கொடுக்க பாலசிங்கமும் இல்லை. தேசியத்தலைவரும் இல்லை. மாவீரர் உரை இல்லாததால் மாவீரர்தினம் புலிகளின் ஆதரவாளர்களுக்கு சுவாரசியமற்று வெறுமனே வியாபாரத்தை கணக்கில் கொள்கின்ற விடயமாகி விட்டது.

மாவீரர் தினத்தில் எல்லாப் போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தியாகி விட்டது. புலிகள் இயக்கத்தை கட்டி வளர்த்த பிரபாகரன் உட்பட இறந்து போய்விட்ட புலிகளின் முக்கிய பிரமுகர்களுக்கான அஞ்சலி எதுவும் இடம் பெறவில்லை. இறுதியாக எரிக் சொலகைம் பிரபாகரனின் மரணத்தை கூட பகிரங்கமாக அறிவித்த நிலையில் அதுவும் மாவீரர் தினத்திற்கு சில நாட்களுக்கு முன்னால் இணையத்தளங்களில் செய்தியாக வந்திருந்தும் கூட புலம்பெயர் புலிகளால் பிரபாகரனை மாவீரராக அறிவித்து அஞ்சலி செலுத்த முடியவில்லை. புலி ஆதரவு பிரமுகர்கள் மரணித்த போதெல்லாம் நாட்டுப்பற்றாளர், மாமனிதர் என்கிற பட்டங்களை வழங்கிய பிரபாகரன் தனது மரணத்திற்கு பின்னால் அஞ்சலி செலுத்த தான் வளர்த்து விட்ட கூட்டம் தயாராக இருக்காது என்பதை எப்படி அவரால் அறிந்திருக்க முடியும்.

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என சப்பைக்கட்டு கட்டுபவர்கள் கூட ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். பிரபாகரன் இருந்தால் புலிகள் இப்படி பிளவு பட்டிருக்க மாட்டார்கள். ஆளையாள் அடிபட்டு அறிக்கை விட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள். வானொலிகளில் பிளவுபற்றி விவாதம் நடாத்திக்கொண்டிருக்கமாட்டார்கள்.

**- இனியவன்**

புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவு பட்டிருக்காது. ஆகமொத்தம் புலிகளின் தலைவர் உயிரோடு இல்லை என்பதை தமது செய்கைகளால் புலம்பெயர் புலிகளே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரபாகரன் தனது மரணத்தின் இறுதி நிமிடங்களில் தனது தவறை நிச்சயம் புரிந்து கொண்டிருப்பார். எரிக் சொல்கைம் சொன்னது போல சர்வதேச அரசியலில் பிரபாகரன் கற்றுக்குட்டி என்பதை உணர்ந்து கொண்டிருப்பார். இறுதிச் சுற்றிவளைப்பில் சர்வதேச சமூகம் புலிகளை கைவிட்டதை கண்டு கவலைகொண்டிருப்பார். புலம்பெயர் நாடுகளில் தூதரங்களை தாக்கி வீதியில் மறியல் நடாத்தி பொலிஸாருடன கைகலப்பில் ஈடுபட்டு வன்முறைகளுக்கூடாக புலிகளின் தலைவரை காப்பாற்ற நடாத்திய எல்லாவித போராட்டங்களும் முள்ளிவாய்க்காலில் புலிகளின் முடிவைத் தவிர வேறொன்றையும் சாதிக்கவில்லை.

பிரபாகரனின் மரணம் தந்த படிப்பினைகளை புலிகள் கற்றுக்கொள்ள வேண்டும். இறுதிவரை பிரபாகரன் மீது அசாத்தியமான நம்பிக்கையை தமிழ்மக்கள் மத்தியில் வளர்த்து இருந்தார்கள். புலிகளின் மீடியாக்களும் தினமும் இதனை செய்திருந்தன. தலைவர் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். உள்ளவிட்டு அடிக்கப்போகிறார், கிளிநொச்சி சிங்கள இராணுவத்திற்கு லெனின்கிராட் என எழுதியவர்கள் எல்லாம் முள்ளிவாய்க்கால் முடிவிற்கு பின்னால் குத்துக்கரணம் அடித்துவிட்டு தமிழ்த்தேசியத்திற்கு உருவேற்றும் வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். முப்பது வருடமாக புலிகளை உசுப்பேத்தி முள்ளிவாய்க்காலில் சமாதி கட்டியவர்கள் தமிழ்த்தேசியத்தை உள்ளுக்குள் இருந்து கருவறுக்கத் தயாராகி விட்டார்கள்.

பொறுத்திருந்திருந்து பாருங்கள் தமிழ்த்தேசியம் படப்போகின்ற பரிதாப நிலமைகளை. தமிழ்த்தேசியத்தின் பெயரால் உணர்ச்சி பொங்க உருவெடுத்து ஆடுகின்ற புலிகளாக இருந்தாலும் சரி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினராகினாலும் சரி உள்ளே உருவெடுத்திருக்கின்ற முரண்பாடுகளும் பிளவுகளும் இதனை துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

# கூட்டமைப்பின் இலக்கு என்ன?



தமிழ் தேசியம், சுயநிர்ணய உரிமை தாயகக் கோட்பாடு என்றெல்லாம் கூறுகின்ற கூட்டமைப்பின கடைசி இலக்கு உண்மயில் என்னவென்று கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்களிற்கே தெரியாது. தேர்தல் காலத்தில் மட்டும் மக்களை நாடிவரும் கூட்டமைப்பினர் தொடர்பில் மக்கள் தற்போது அதிருப்தி அடைய ஆரம்பித்துள்ளனர். தமிழ் மக்களினுடைய இனப்பிரச்சினை தொடர்பில் கூட்டமைப்பிடம் ஒரு தெளிவான விளக்கமோ அல்லது ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கக் கூடிய சிந்தனையோ துளியளவும் இல்லை என அடித்துக் கூறலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கள்ளம் கபடமின்றி தனது நகர்வுகளை செய்கின்ற ஒரு கட்சியாக இருநதால் அரசுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் விபரங்களை தமிழ் மக்களிற்கு பகிரங்கப்படுத்த முன்வருமா. அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுக்களை கூட்டமைப்பினர் நடத்திய போதும் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தை தொடர்பில் வாயே திறப்பதில்லை.

அத்துடன் அரசாங்கம் முன்வைக்கும் யோசனைகளிற்கு கூட்டமைப்பிடம் மாற்றுத் திட்டமும் கிடையாது. தமிழ் மக்களின் விடயத்தில் வெளிப்படையாக நடந்து கொள்பவர்கள் என்றால் தீர்வுத் திட்டத்தை கூட்டமைப்பினர் முதலில் முன்வைக்க வேண்டும். அப்படி முன்வைப்பதற்கு கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும். ஆனால் கூட்டமைப்பிற்குள் கருத்தொற்றுமை ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் எட்டாக் கனியாகவே காணப்படுகிறது.

கூட்டமைப்பிற்குள் புதிது புதிதாக தோன்றும் போட்டிகளாலும் சிக்கல்களாலும் தினமும் குழப்பமைடைந்து வருகிறது. தற்போதைய புதிய பிரச்சினையாக கூட்டமைப்பிற்குள் உருவெடுத்திருக்கும் பிரச்சினையானது TELO வை ஓரம் கட்டும் பிரச்சனையாகும். TELO வை ஓரம் கட்டும் முடிவு சம்பந்தனாலும், சரவணபவனாலும் மிக இரகசியமாக எடுக்கப்பட்ட முடிவாகும். இம் முடிவிற்கு சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஆதரவு அளித்துள்ளார். இதனை அடுத்தே அரசு-கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் செல்வம் அடைக்கலநாதன் ஓரம்கட்டப்பட்டு வருகினறார்.

சம்பந்தன், சுமந்திரன், சரவணபவன் ஆகியோரின் அடுத்த இலக்கு EPRLF ஐ வெளியேற்றுவது என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் உணர்ந்திருந்தால் TELOவை ஓரங்கட்டுவற்கு ஒத்துழைத்திருக்க மாட்டார். பாவம் சுரேசிற்கு சம்பந்தனின் நகர்வுகள் விளங்கவில்லையோ தெரியாது. ஆனால் அவருக்கு ஒன்றுமட்டும் விளங்கும், என்ன குத்துக்காரணம் தான் அடித்தாலும் 1987ஆம் ஆண்டு தமிழ் மக்களிற்கு எதிராக தன்னால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளின் பழி, பாவம் என்றைக்கோ ஒருநாள் தன்னைச் சூழும் என்பதில் அவர் தெளிவாகவே இருக்கிறார். அதுவரை அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிப்போம் என்பதே சுரேசின் முடிவாகும்.

இவ்வாறு உட்பூசல்களாலும் உட்கட்சி மோதல்களாலும் தினமும் நெருக்கடிகளை சந்திக்கும் கூட்டமைப்பால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடரபில் அடுத்தகட்டத்திற்கு நகரமுடியாது என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

வெளிநாட்டுப்பயணம் தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பினரை பார்த்து பகிரங்கமாக நீங்கள் ஒரு அணியாகவே இருந்து கொண்டு யார் உங்களில் தமிழ்த் தேசிய வாதிகள் என்பதை புலம்பெயர் தமிழர்களிற்கு காட்டுவதற்காகவும் உங்களில யார் தமிழ் இனவாதத்தை பேசி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து நாடாளுமன்ற நாற்காலிகளை கைப்பற்றி உங்களது சுகபோகங்களை அனுபவித்துவிடலாம் என்ற போட்டியில் ஈடுபட்டு வருகினறீர்கள்.

தமிழ்த்தேசியம் என்பது வெறுமனே தமிழ் இன உணர்ச்சிகளை மட்டும் ஊட்டிவிட்டு மக்களை வீதிக்கு இழுத்து விட்டு நீங்கள் மட்டும் நாட்டை விட்டே ஓடிப்போய் ஒளிந்து கொள்ளும் கோழைத்தனம் அல்ல. கட்டிய வேட்டி கசங்காமல், உடுத்த உடுப்பின் மடிப்பும் கசங்காமல், வியர்வை சிந்தாமல் உலகநாடுகளின் உல்லாச விடுதிகளில் படுத்துறங்கும் சோம்பேறித்தனமும் அல்ல.

அது, எமது மக்களுக்காக குரல் கொடுத்து எமது மக்களுக்காக மக்களுடனேயே வாழ்ந்து அவர்களது இன்ப துன்பங்களிலும் பங்கெடுப்பதாகவே இருக்க வேண்டும்.

யுத்த காலத்தில் சோறில்லை என்று அழுத சாதாரண குடிமக்களின் குரலுக்கு செவிசாய்க்க விரும்பாமல், அன்றாட அவலங்களில் சிக்கித் தவித்த மக்களின் துயரங்களை போக்க முடியாமல் மேல் நாட்டு பஞ்சணைகளில் படுத்துறங்கப் போனீர்கள். அதற்காகவே தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையினை காரணமாக வைத்து இன்று வரை நீங்கள் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ் என்று உலகத்தை சுற்றி வருகிறீர்கள். இலங்கையில் மழைபெய்கிறது. நீங்கள் அமெரிக்காவில் சென்று குடை பிடிக்கின்றீர்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் இருந்து எமது மக்களுக்காக என்ன வாங்கி வந்தீர்கள்? அங்கிருந்து எமது மக்களுக்காக என்னவொரு நல்ல செய்தியை கெண்டு வந்தீர்கள்?

உண்மையில் இந்தக் கேள்விகளிற்கு சம்பந்தனிடமோ சுரேசிடமோ அல்லது சுமந்திரனிடமோ பதில் இருக்கிறதா? உண்மையில் இவர்கள் தங்களது மனச்சாட்சியை வைத்து இக் கேள்விகளிற்கு விடை அளிக்க முடியுமா? இலக்குகள் எதுவும் அற்று தமது சொந்த சுயலாபத்திற்கான நகர்வுகளை மட்டுமே கூட்டமைப்பினர் செய்கின்றனர்.

இனப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தோடு நெருப்பாக துள்ளிக்குதிக்கும் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் குடும்ப உறவை பேணுவதாகவும். ஜனாதிபதி கூட்டமைப்பினர் மீது தனிப்பட்ட ரீதியில் விருப்பம் கொண்டுள்ளார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளிப்படையாகவே பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். இதற்கு கூட்டமைப்பினரின் பதில் என்னவாக இருக்கப் போகிறது?

ஒன்றில் இணக்க அரசியலில் ஈடுபட வேண்டும் அல்லது எதிர்ப்பு அரசியலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ் தேசிய விடுதலை முன்னணி) போன்று பகிரங்கமாக ஈடுபட வேண்டும். இரண்டுமே இல்லாமல் இரு தோணியிலும் காலை வைத்து தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலையே கூட்டமைப்பு செய்கிறது. இலக்குகள் அரசியல் கொள்கைகள் இன்றி கூட்டமைப்பினர் எவ்வளவு காலத்திற்கு மக்களை ஏமாற்றப் போகிறார்கள்? அரசியல் இலக்குகள் இல்லாத கூட்டமைப்பின் பயணத்தின் இறுதி இலக்கு என்ன என்பது புரியாத புதிராகும்.

**- த.கடலவன்**

# சேமலாப நிதி கொடுப்பனவுகள் தாமதமின்றிக் கிடைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய தனியார்துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளை தாமதமின்றி வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


இதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் யாழ். தொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேசத்தில் 472 ஊழியர்களும், உடுவில் பிரதேசத்தில் 781 ஊழியர்களும் கைவிரல் அடையாளமிடும் செயற்பாட்டைப் பூர்த்தி செய்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் கைவிரல் அடையாளமிடும் செயற்பாடானது நடைபெற்று வருகின்றது. இச்செயற்திட்டம் நாளை மறுதினம் யாழ். வீடமைப்பு அதிகார சபையிலும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திலும், அதே தினம் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெறும்

இச்செயற்பாட்டில் கைவிரல் அடையாளமிடத் தவறிய கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள் தாமதமின்றி தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிரதித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# மாதகல் மேற்கில் குடியேற்றுமாறு மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயமான மாதகல் மேற்குப் பகுதியில் தங்களை உடனடியாக மீள்குடியேற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றில் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் நேற்றுக் காலை ஒன்றுகூடிய இம்மக்கள், அங்கிருந்து சென்று வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைவர் எஸ். ஜெபநேசனிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

மாதகல் மேற்கு உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்வதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அப்பகுதியில் படை முகாம் அமைக்கப்படவுள்ளதாக கேள்விப்பட்டதைத் தொடர்ந்து மாதகல் மேற்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த இம்மக்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

"எங்களின் நிலம் எமக்கு வேண்டும், "எங்கள் காணிகளுக்கு வரி அறவிடும் பிரதேச சபையே எங்கள் நிலத்தை மீட்டுத்தாருங்கள்", "மகிந்த அரசினால் மீட்கப்பட்ட நிலங்களில் மீண்டும் இராணுவ முகாம்களா?" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

# நடமாடும் சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி தெற்கு மேற்கு பகுதிகளுக்கான நடமாடும் சேவை இன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள், இந்தியாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் காணி தொடர்பான விடயங்களும், சட்ட ஆலோசனைகளும் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலர் செ.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (116)

# யாழில் இரும்பு வியாபாரி கைது தண்டவாளம் விற்றதாக குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ரயில் தண்டவாளத்தை சட்ட விரோதமாக பெற்று விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் தனது வியாபார நிலையத்தின் ஊடாக ரயில் தண்டவாளங்களை சட்ட விரோதமாக கடத்தி விற்பனை செய்து வருவதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் இன்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

# மாகாண மட்ட புதிர்ப் போட்டி மகாஜனா மாணவர்கள் தெரிவு

மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள புதிர்ப் போட்டிக்கு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலிருந்து 6 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் க.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

பிரிவு 9, 10 இல் ப.கௌதமன், ஜெ.மயூரன், ஞா.டிலக்சன், வ.விதுஷன், ஜெ.பரணிதா, கி.விஷ்ணுகா ஆகியோரே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் ஆவர்.

மேற்படி போட்டி இராமநாதன் கல்லூரியில் 7 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மேற்படி மாணவர்களை குறிப்பிட்ட தினத்தில் மாகாண மட்ட புதிர்ப் போட்டியில் பங்கேற்க நடவடிக்கை எடுக்குமாறு அதிபர் கேட்கப்பட்டுள்ளார். (06)

## கண்ணிவெடி...

அகற்றப்பட்டுள்ளதாகவும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, முன்னர் புலிகள் தங்கியிருந்த காட்டுப் பகுதியில் தற்போது கண்ணி வெடியகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி நாளொன்றுக்கு 6 சதுர கிலோமீற்றர் பரப்பளவு பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், மனிதாபிமான தேசிய நிலக்கண்ணி வெடி அகற்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

படையினருக்கு சொந்தமான 33 வாகனங்களும் வேறு தரப்பினருக்கு சொத்தமான 6 வாகனங்களும் இந்த நடவடிக்கைளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலி ஆதரவாளர்களுடன்....

ராஜபக்ஷ தொடர்ந்தும் உரையாற்றுகையில், சிலர் நாட்டுக்கு நாடு சென்று நாட்டை விமர்சிக்கின்றார்கள். அவர்களது விமர்சனங்களை ஏற்க எமது மக்கள் தயாரில்லை. இவர்களின் செயற்பாடுகளைப் பார்த்து சில வெளிநாட்டுத் தலைவர்கள் சிரிக்கின்றார்கள்.

எமது விடயங்களை வெளிநாடுகளுக்குச் சென்று கூற அவசரப்படாமல் அவற்றை முதலில் என்னிடம் கூறுவதே சிறந்தது. மக்கள் நலன் சார்ந்த வரவு- செலவுத் திட்டத்தை அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். அச்சமயம் எதிர்க் கட்சியினர் சபையிலிருந்து வெளியேறினர். ஆனால் நாம் அன்று எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது அன்றைய ஆளும் கட்சி முன்வைத்த வரவு- செலவுத் திட்டத்தை நல்லபடி செவிசாய்த்து வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது தான் எதிர்ப்புகளை தெரிவித்தோம்.

தற்போதைய அரசாங்கத்தின் மக்கள் நலன் சார்ந்த பயணத்தை அற்ப அரசியல் நோக்கங்களை கொண்டு நிறுத்தி விட முடியாது என்று, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். எனக்கு ஜனாதிபதி பதவியை விட செல்ல உச்ச இடம் வேறில்லை. அரசியலில் நன்கு பழக்கப்பட்ட நான் விமர்சனங்களைக் கண்டு ஒருபோதும் சலிப்படையமாட்டேன் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க முடியாவிட்டால் அரசியல் செய்ய முடியாது. அதனால் விமர்சனங்களைச் சலிப்படையாது பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சில வெளிநாட்டுத் தலைவர்களுக்கு நடந்த கதி எனக்கும் நடக்கலாம் எனச் சிலர் எதிர்பார்க்கிறார்கள். அது வெறும் கனவே என்றும் ஜனாதிபதி கூறினார்.

பணம் இல்லை என்பதற்காகக் கிராம அபிவிருத்தியைத் தாமதப்படுத்த முடியாது. எமது அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழித்தல் உள்ளிட்ட பல சவால்களுக்கு முகம் கொடுத்தபடியே நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்தது என்றார்.

## உள்நாட்டில்....

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்னைப் பாதுகாப்பதற்காக எனது குடும்பத்தினர் வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பதாக அரசாங்கத்திற்கு பணிவிடை செய்யும் முட்டாள் சட்டத்தரணிகள் ஊடகமொன்றில் கூறியிருந்தனர்.

எனினும் உள்நாட்டில் நியாயம் கிடைக்காவிட்டால் சர்வதேசத்திற்கு செல்வதற்குத் தயங்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

நான் நாட்டை நேசிக்கிறேன் சில அரசியல்வாதிகள் நாட்டைச் சூறையாடும் வரை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## 25 ஆயிரத்து...

மானிப்பாயில் 3037 வாக்காளரும், கோப்பாயில் 3210 வாக்காளர்களும், உடுப்பிட்டியில் 1455 வாக்காளர்களும், பருத்தித்துறையில் 1785 வாக்காளரும், சாவகச்சேரியில் 1517 வாக்காளர்களும், நல்லூரில் 3172 வாக்காளர்களும், யாழ்ப்பாணத்தில் 2732 வாக்காளர்களும், கிளிநொச்சியில் 5345 வாக்காளர்களும் புதிதாக தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.குகநாதன் தெரிவித்துள்ளார். (எஸ்)

## அரசு...

தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளது. அதற்கு அரசாங்கம் தரும் பதிலை பொறுத்தே தமது தரப்பு அடுத்த கட்ட நடவடிக்கையை அறிவிக்கும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

## எண்ணெய் வள...

ஏனைய இரண்டு பிரிவுகளில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விலை மனு கோரப்பட்டுள்ளது. இதில் தென்பகுதி கடற்பரப்பில் ஆய்வுப் பணிகளை சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவது என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக, இந்தப் பணிகளை சீன நிறுவனத்திற்கு வழங்கப்படுமா என்பது நிச்சயமற்றதாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போருக்குப் பின்னரான...

நிலைமையில் முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. அதாவது பொருளாதார, சமூக மற்றும் ஏனைய துறைகளில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தற்போதைய நிலைமையில் இலங்கையில் தன்னார்வத் தொண்டர் சேவைகள் சிறப்பான முறையில் இடம்பெற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தன்னார்வத் தொண்டர் அமைப்பின் இலங்கை அலுவலகத்தினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உலகெங்கிலும் பல நாடுகளில் இடம்பெறும் அறிக்கை வெளியீட்டுக்கு சமாந்தரமாக இலங்கையிலும் தன்னார்வத் தொண்டர் சேவை தொடர்பான முதலாவது அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. நாடாளுமன்ற...


கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வரவு - செலவுத்திட்டத்தை விட இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவே இதனைப்பயன்படுத்தி புதியபல வேலைத்திட்டங்களுடன் மக்களுக்கு சேவையினை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.



# மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாத அபிவிருத்தி

## சமாதான, நல்லெண்ண மக்கள் குழு குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றம், வீதி அபிவிருத்தி என தொடர்ந்து செல்லும் அபிவிருத்திகள் மக்கள் மத்தியில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு குற்றம் சாட்டியுள்ளது.

வடமாகாண ஆளுநருக்கும், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவிற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை விளக்கும் முகமாக யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இக்குழு மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளது.

இக்குழு மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திகள் மக்களிடையே பாரிய சமூக பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. வட பகுதியில் கல்வியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், சுகாதாரத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சாதாரண குடும்பங்களின் வீடுகளில் மின்சார வசதி கூடஇல்லை. தற்போது மீள்குடியேறிய பகுதிகளில் வசிக்கும் குடும்பங்கள் மின்சார வசதியின்றிப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். இம் மக்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமானது.

யாழில் அபிவிருத்தி காணப்பட்டாலும் அரசாங்கம் மீள்குடியேறிய மக்களின் தேவைகளையும், நிரல்படுத்தி மக்களின் வாழ்வியலில் முன்னேற்றத்தைச் செய்யவேண்டும். மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை 5 மாடிக் கட்டடத்திற்கு நோயாளர்களைக் கொண்டுசெல்வதற்கு லிப்ட் வசதிகளைச் செய்வதற்கான வேலைகளை மிக விரைவில் செய்துதருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், புகையிரத நிலையம் அமைக்கவேண்டும். அதற்கான வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டும் எனவும், வடமாகாணத்தில் கடவுச் சீட்டு அலுவலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் ஆளுநரிடம் இக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்குழுவின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த ஆளுநர் தாம் இதற்கென நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தித் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார் என அமைப்புத் தெரிவித்துள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, எஸ்பரமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(எஸ்)

# விசேட செயலமர்வு

தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்விற்கு 2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்ப்பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி, செலவின விவரம், பயனாளிகள் விபரம், பாடசாலை மேற்பார்வைத் தரிசிப்புக்களின் விபரம், மேற்பார்வையின்போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளும் தீர்வுகளும், 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள், தரம் 9, தரம் 11 மாகாணமட்ட முன்னோடிப் பரீட்சைப புள்ளிப் பகுப்பாய்வு, க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பயிறசிப் பரீட்சை வினாத்தாளுக்கான வினா உருப்படி தயாரிக்கும் ஆசிரியர்கள் விவரம் மற்றும் 2012 ஆம் ஆண்டு தமிழ்மொழித் தினப் போட்டிகள் தொடர்பான விபரங்களுடன் சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். (06)

# உண்ணாவிரத கைதி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் கடந்த 5 வருடங்களாகத் தடுத்து வைகைகப்பட்டிருந்த கைதியொருவர் தனக்கு உடனடியாகப் பிணை வழங்குமாறு கோரி உண்ணா விரதம் மேற்கொண்ட நிலையில் உடல்நிலை மோசடைந்தமையினால் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முனதினம் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 2006 ஆம் ஆண்டு இராணுவத்தால் வரணிப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இராசையா ஆனந்தராசா (வயது - 30) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# இணையத்தள தடை எதிர்த்து நீதிமன்றில் மனு

இணையத் தளங்கள் தடை செயயப்பட்டமைக்கு எதிராக மேல் நீதிமன்றில் மனுவொன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க செய்திப் பணிப்பாளர், வெகுசன ஊடக அமைச்சர் அமைச்சின் செயலாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செயயப்பட்டுள்ளது.

இணையத் தளங்கள் தடை செயயப்படுவதன் மூலம் மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும உரிமை முடக்கப்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட இணைய தளங்கள் தனிப்பட்டவர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையிலோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ செய்திகளை வெளியிடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத் தளங்களை தடை செய்வதன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் உடனடியாக அந்தத் தடையை நீக்க வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தடை செய்யபட்ட இணையத் தளமொன்றும் அடிபபடை உரிமை மீறல் மனுவொன்றை இலங்கையின் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாய்களின் இறக்குமதி பொலிஸ் சேவைக்குப் பலம்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் மோப்ப நாய் பிரிவுக்கு வெளிநாடுகளில் இருந்து நூறு நாய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்நாய்கள் ஒவ்வொன்றினதும் பெறுமதி, சுமார் ஐந்து இலட்சம் ரூபாவாகும். போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் உட்பட ஒவ்வொன்றுக்குமான செலவு சுமார் 775,000 ரூபா என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பெல்ஜியம், நெதர்லாந்து, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து இந்நாய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருட்களை கண்டறிதல், குற்றவியல் சம்பவங்கள் தொடர்பான மோப்பம் பிடித்தல் ஆகியவற்றுக்கு இந்நாய்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

மோப்ப நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு இலங்கையினால் வாங்கப்படக்கூடிய மிகச சிறந்த நாய்கள் இவையாகும் என டாக்டர் தங்கொல்ல கூறினார்.

மேற்படி நாடுகளிலிருந்து கிடைத்த 240 விண்ணப்பங்களிலிருந்து இந்நாய்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருகவைத்திய பீடத்தைச் சேர்ந்த டாக்டர் அஷோக் தங்கொல்ல மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர வீரகோன் ஆகியோரினால் இத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

# டிசம்பர் 19 வரை விளக்கமறியல்

போதைப்பொருள் கடத்தியதாக தெரிவிக்கப்படும் எட்டு மீனவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் எஸ்.கஜநிதிபால நேற்று உத்தரவிட்டுள்ளார். இவர்களில் இலங்கை மீனவர்கள் மூவரும் இந்திய மீனவர்கள் ஐந்து மீனவர்களும் அடங்குகின்றனர். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் கொழும்பு இராசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையை நீதிமன்றில் சமர்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்திய மீனவர்களின் நலன்களை யாழ்.சிறையில் கவனித்துக்கொள்வது தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் சட்டத்தரணி மூலம் விண்ணப்ப மனு ஒன்றையும் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளது.

# பெற்ற குழந்தையை விற்ற தாய் உட்பட மூவர் கைது




மட்டக்களப்பு வவுணதீவு பொலிசாரால் இரண்டு வயது ஆண் குழந்தையை விற்பனை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் குழந்தையின் தாய், குழந்தையை வாங்கியவர், விற்பனையில் இடைத்தரகராக செயற்பட்டவர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன் கிழமை 30 ஆம் திகதி வவுணதீவு பிரதேசத்திலுள்ள சந்தேக நபர் குழந்தையொன்றை ரூபாய் 12 ஆயிரத்திற்கு வாங்கியிருப்பதாக கிராமிய குழந்தைகள் பாதுகாப்புக் குழுவினால் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு அதிகாரியினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து மூவரும் சந்தேகத்தின் பேரில் கைதாகி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குழந்தையின் தாய் மத்திய கிழக்கு நாடொன்றிற்கு தொழில் வாயப்பு பெற்றுச் செல்லவிருந்தார். இதற்கான பயிற்சியை அரசாங்க பயிற்சி நிலையமொன்றில் பெற்று வந்த வேளையிலேயே இவர் கைதானதாக தெரிவிக்கப்படுகிறது. திருமணமாகி 20 வருடங்கள் கடநதும் தனக்கு குழந்தை இல்லாத காரணத்தினாலேயே இக்குழந்தையை வளர்ப்பதற்காகத் தான் பெற்றுக்கொண்டதாகக் குழந்தையை வாங்கியதாக சந்தேகிக்கப்படும் 34 வயதுப் பெண் கூறினாா.

குழந்தைக்கு விலையாக எதுவும் தான் கொடுக்கவில்லை என்றும், வெளிநாடு சென்று இந்தப் பணத்தை மீளச் செலுத்துவதாகக் கூறிக் கடனாகவே குழந்தையின் தாய் 12 ஆயிரம் ரூபாய் தன்னிடம் இருந்து பெற்றதாகவும் அவர் கூறினார். வளர்ப்பதற்காக குழந்தையைப் மற்றவரிடம் இருந்து பெறுவது தொடர்பான சட்டங்கள் தொடர்பில் தான் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

# மேற்கிந்திய அணி வெற்றி




இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நேற்றைய தினம் அகமதாபாத்தில் இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சாமுவேல்ஸ் - 58, ரஸல - 40, ராம்டீன் - 38, சமி - ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வினய்குமார் - 2, யாதவ், மிதுன், அஷ்வின் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

261 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களமிறங்கிய இந்திய அணி அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. இதில் சேவாக், கம்பீர் இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்க ஏனைய வீரர்களும் பெருமளவில் சோபிக்காத நிலையில் இந்திய அணி 46.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இவ்வணி சார்பாக இறுதிவரை போராடிய ரோகித் சர்மா - 95, அஸ்வின் - 31, மிதுன் - 23, கோலி - 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராம்போல் - 4, நரைன் - 2, றோச், சாமுவேல்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ராம்போல் தெரிவானார். ஐந்து போட்டிகளைக்கொண்ட தொடரில் இந்திய அணி 2:1 எனமுன்னிலை வகிக்கின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.